சுவடி : 45
ஏடு : 05
சனவரி - 2021

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

✶

ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா. பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி. துரைசித்தார்த்தன்**
**முனைவர் முத்தமிழ்**

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

**'சிந்தனையாளன்'**
**பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை அறக்கட்டளை வளாகம்**
மனை எண் 277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை
அம்பத்தூர்
சென்னை - 600050.

கைப்பேசி
**94448 04980**
**86681 09047**
**95975 26990**

மின்னஞ்சல்
**sinthanaiyalantamilmonthly@gmail.com**

✶

இதழ் வடிவமைப்பு
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

✶

இணையத்தில் படிக்க
**www.keetru.com**


**SINTHANAIYALAN**
**JANUARY - 2021**

*ஆசிரியவுரை*

# இடஒதுக்கீட்டை ஒழிக்கத் துடிக்கிறது இந்திய அரசு!

## புஷ்யமித்ர சுங்கர்கள் ஆட்சியில் பார்ப்பனியம் தலைவிரித்தாடுகிறது!

## சுழலட்டும் பெரியார் அம்பேத்கர் கைத்தடிகள்...



இந்தியச் சமூகத்தில் ஆரியப் பார்ப்பனர்கள் ஊடுருவிய காலந்தொட்டு வெகுமக்களாக இருக்கிற உழைக்கும் வர்க்கத்தினரான சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களும் இழிமக்களாக நடத்தப்பட்டு, தொடர்ந்து 2000 ஆண்டுகளாகக் கல்விபெறுகிற, மிகுதியான உடலுழைப்பு செலுத்துகிற பணிகள் தவிர்த்த அரசாங்க - அதிகாரம் செலுத்துகிற வேலைகள் செய்கிற உரிமையும் மறுக்கப்பட்டனர்; 2020-இலும் மறுக்கப்படுகின்றனர்.

இதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது பிறப்பால் உயர்வு - தாழ்வு கற்பிக்கிற வருணாசிரம தர்மமும், மநுநீதியும், புராண இதிகாசங்களும்; இரும்புக்கோட்டை போலப் பாதுகாப்பு கொடுப்பது வெகுமக்களுக்கு எதிரான இந்திய அரசமைப்புச் சட்டமும் அவற்றை நடைமுறைப்படுத்துகிற பொறுப்பிலுள்ள பார்ப்பன அதிகாரிகளும், நீதிமன்றங்களும் ஆகும்.

*"ஏவலர்களான சூத்திரசாதி மக்கள் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய மூவர்க்கும் பொறாமையின்றிப் பணிபுரிதல் ஒன்றையே முதன்மை யாகக் கொள்ளக் கடவர்" (1 : 91)*

*"ஒரு பிராமணன் ஒரு சூத்திரனுடைய பொருள்களை முழுமன அமைதியோடு எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் சூத்திரனுக்கென்று எதுவும் சொந்தமில்லை. அவனது சொத்துக்களை அவனது எஜமானன் எடுத்துக் கொள்ளலாம்" (8 : 417)*

*"ஒரு சூத்திரனால் சம்பாதிக்க முடியுமானாலும் அவன் செல்வத்தைப் பெருக்க அனுமதிக்கக் கூடாது. சூத்திரன் வைத்திருக்கும் செல்வத்தை வெறுமனே பார்ப்பதுகூட பிராமணனைத் துன்புறுத்தும்" (9 : 129)*

என்கிறது மனுநீதி.

ஈராயிரம் ஆண்டுகளின் இந்த இறுக்கமான கட்டமைப்பு சற்றே நடுக்கமுற்றது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான், பார்ப்பனரல்லாதார் தலைமையில் அமைந்த நீதிக்கட்சி ஆட்சியில்தான். அதுவரை பார்ப்பனர், சத்திரியர், வைசியர் மற்றும் சற்சூத்திரர் என்கிற மேல்சாதி சூத்திரர்கள் உள்ளிட்ட 17 விழுக்காடு மக்களே கல்வி பெறுவதிலும் அரசுப் பணிகளைப் பெறுவதிலும் முற்றுரிமை பெற்றவர்களைப் போல இருந்தனர்.

பார்ப்பனர் அல்லாத மக்கள் - தகுதி, திறமை என்கிற பேரால் மாகாண அரசின் வேலைகளிலும், மாகாண அரசின் உயர்படிப்பிலும் 1920 வரை பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு உரிமையற்றுக் கிடந்தனர். 1927-க்குப் பிறகுதான் தந்தைபெரியார், முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன், பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் எஸ்.முத்தைய முதலியார் ஆகியோரின் பெருமுயற்சியால், 1928 முதல் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார், இசுலாமியர், கிறித்துவர், ஆதித்திராவிடர் ஆகிய 5 வகுப்புகளுக்கும் மாகாண அரசின் வேலையில் வாய்ப்புத் தரப்பட்டது. 1940 முதல் கல்வியிலும் இந்த 5 வகுப்புகளுக்கும் இடப்பங்கீடு தரப்பட்டது. அதன் விளைவாக

பழைய சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதாரின் நிலை இந்த இரண்டு துறைகளிலும் சொல்லும் படியான நிலையில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

வடநாட்டுப் பார்ப்பனரல்லாதார் நிலை குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் நிலை மிகவும் பின்தங்கி இருப் பதற்குக் காரணம், வெள்ளையன் வெளியேறிய பிறகும் இந்திய அரசமைப்புச் சட்டம் 1950-இல் நடப்புக்கு வந்தபிறகும் 1978 வரை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு விழுக்காடு இடஒதுக்கீடுகூட வழங்கப்படாததே ஆகும்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் இணைந்து 1978 முதல் நடத்திய - பீகார் மாநிலம் முழுவதும் 17.9.1978 முதல் 18.10.1978 வரை வகுப்புரிமைப் பரப்புரை, 19.10.1978 முதல் 31.10.1978 வரை பாட்னாவில் சிறைநிரப்பும் போராட்டம் (பத்தாயிரம் பேர் சிறை) 20.12.1978-இல் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு அறிவிப்பு; 15.11.1979 முதல் 01.12.1979 முடிய தில்லி திகார் சிறை நிரப்பும் போராட்டம் உள்ளிட்ட தொடர்ச்சியான போராட்டத்தின் வழிதான் மண்டல் குழு அமைக்கப்பட்டு 1994-இல் முதன் முதலாகப் பிற்படுத்தப்பட்டோருக்கு நடுவண் அரசில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்தியாமுழுவதிலும் உள்ள பட்டியல் வகுப்பின ருக்கும் பழங்குடியினருக்கும் அரசமைப்புச் சட்டப்படி 1950-இல்தான் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு தரப்பட்டது. இருப்பினும் மொத்தம் 25.5 விழுக்காடு மக்கள் தொகையுள்ள பட்டியல் வகுப்பினரும் பழங்குடியினரும் முதல்நிலைப் பதவிகளில் 2021-இலும் 17 விழுக்காட்டுக்கு மேல் பங்குபெறமுடியவில்லை. அதேபோல் பிற்படுத்தப் பட்டவர்கள் நடுவணரசின் கல்வியிலும் வேலையிலும் 1994-இல்தான் இடஒதுக்கீடு பெற்றனர். எல்லா மதங் களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோரும் 2020-இலும் 5 விழுக்காடு அளவுக்கே நடுவணரசின் முதல்நிலைப் பதவிகளில் பங்குபெற்றுள்ளனர். ஆனால், அவர்களின் மக்கள்தொகை இந்திய அளவில் 57 விழுக்காடு ஆகும்.

2018-இல் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங் களில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடி மக்களின் நிலை பற்றிய ஒரு கேள்விக்கு நாடாளுமன்றத்தில் விடையிறுத்த இந்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், பேராசிரியர் பணியிடங்களில் 25.5 விழுக்காடு உள்ள இம்மக்கள் 2.8 விழுக்காடு மட்டுமே பங்கு பெற் றுள்ளனர் என்கிற பேருண்மையை ஒப்புக்கொண்டார்.

இத்துனைப் போராட்டங்களுக்குப் பிறகு கிடைக்கப் பெற்ற மக்கள் தொகையின் அடிப்படையில் இல்லை யெனினும் மிகக்குறைந்த அளவான சட்டப்படியான இந்தப் பங்கீடுகளைக்கூட உயர்பதவிகளிலும், இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (IITs), இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் (IIMs), இந்திய அறிவியல் நிறுவனம் (IISc), பிற நடுவண் கல்வி மருத்துவ நிறுவனங்களில் “தகுதிபெற்ற ஆட்கள் இல்லை” என்ற மோசடியான காரணங்களைச் சொல்லி அந்த இடங்களை நிரப்பாமல் விடுவதும், இடஒதுக்கீடு முறையையே மாற்றி அந்த இடங்களில் முற்பட்ட வகுப்பினரையும் நிரப்பும் என்கிற மோசடியைக் கமுக்கமாக நிறைவேற்றி வந்த பார்ப்பனியக் கும்பல், பாசிச வெறிபிடித்த பாசக ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இடஒதுக்கீட்டையே முற்றிலுமாக ஒழித்துக்கட்டிட எல்லாம் செய்யத் துணிந்துவிட்டன.

அதன் நீட்சியாகத்தான் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களில் பேராசிரியர்கள் நியமனத்தில் மட்டுமன்றி, மாணவர் சேர்க்கையிலும் இடஒதுக்கீட்டைப் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்காக என தில்லி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் இராம் கோபால் ராவ் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை 2020 ஏப்ரலில் அமைத்த இந்திய உயர்கல்வித்துறை அமைச்சகம் மூன்றே மாதத்தில் சூன் 2020-இலேயே அதன் அறிக்கை யையும் கமுக்கமாகப் பெற்றுக்கொண்டது மோடி தலைமை யிலான பாஜக அரசு.

தகலறியும் உரிமைச் சட்டப்படி பெறப்பட்டுள்ள அதன் பரிந்துரைகள் சில நாளேடுகளில் வெளிவந்துள்ளன.

அவ்வறிக்கையில், “கற்பித்தல், ஆராய்ச்சி, திறமை யான மாணவர்களை உருவாக்குதல் உள்ளிட்டவற்றில் உலகின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களுடன் போட்டி யிட ஏதுவாகக் கல்வித் தரத்தை உயர்த்தவேண்டுமெனில் இடஒதுக்கீடு கூடாது; இடஒதுக்கீட்டுப் பிரிவிலிருந்து தகுதியான ஆட்கள் கிடைப்பதில்லை” என்று கூறி யிருப்பது இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்டுவது மட்டுமல்ல, இந்திய அரசமைப்புச் சட்டத்தையே அவமதிப்பதும், 136 கோடி இந்தியருள் 113 கோடி மக்களாக இருக்கிற உழைக் கும் மக்களான ஒடுக்கப்பட்ட மக்களை வஞ்சிப்பதும் இழிவுபடுத்தும் செயலாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்திலிருந்து பொதுப் பட்டியலை ஒழித்துக் கட்டுவதும், கல்வி உள்ளிட்ட நடுவணரசு பறித்துக்கொண்ட மாநில உரிமைகளைப் போராடி மீளப்பெறுவதும், ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மக்களின் மக்கள் தொகைக்கேற்ப கல்வி, வேலை என எல்லாத் துறைகளிலும் விகிதாசாரப் பங்கீடு பெறுவதும் மட்டுமே இன்றைக்கிருக்கிற இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிற உரிமைகளின் படி அடையக்கூடிய வாய்ப்புள்ள தீர்வுகளாகும்.

**புஷ்யமித்ர சுங்கர்கள் ஆட்சியில் பார்ப்பனியம் தலை விரித்தாடுகிறது.**

**இப்போதும் இந்திய ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணியில் திரண்டு போராடத் தவறுவது என்பது அவர்கள் தற்கொலை செய்துகொள்வதற்குச் சமம்.**

**பார்ப்பனியக் கொட்டமடக்க பெரியார் அம்பேத்கரின் கைத்தடிகள் சுழலட்டும்.**

**இத் தன்மானப் போரின் வழி ‘ஆயிரம் பூக்கள் மலரட்டும்’ என்பதுபோல முப்பத்திரண்டு குடியரசுகள் மலர்ந்து உண்மை யான இந்திய ஒன்றியத்தினைச் சமைக்கட்டும்.**

01.01.2021 **ஆசிரியர் குழு**

# தமிழ்ப் பண்பாட்டுக் காவலர் - முதுபெறும் தமிழறிஞர்
# பேராசிரியர் தொ. பரமசிவன்
# தம் சிந்தனையை நிறுத்திக்கொண்டார் !



**தொ.ப** என எல்லோராலும் அழைக்கப்பெற்ற முதுபெரும் தமிழறிஞர் அய்யா பேராசிரியர் தொ.பரம சிவன் தம் சிந்தனையை நிறுத்திக்கொண்டார்.

தமிழ்த்தேச அரசியலுக்குத் திராவிட இயக்கப் பங்களிப்புகளை நேர்மையோடு திறனாய்வு செய்வதிலும் பெரும் பங்காற்றிய சீரிய சிந்தனையாளர். பெரியாரின் சிந்தனைகள் எப்படித் தமிழுக்கும் தமிழருக்கும் அரண் சேர்ப்பவை என்பதை நடுவுநிலைமையோடு ஆய்ந்தளித் தவர். பெரியாரைத் தமிழ்ச் சமூகத்திற்கு எதிர் நிலையில் நிறுத்த முயல்வோரை இடித்துரைத்தவர்.

ஆர்எஸ்எஸ் பார்ப்பனிய இந்துத்துவப் பாசிசம் நாட்டையே பீடித்துக்கொண்டிருக்கும் இன்றைய சூழலில் பெரியார் முன்னிலும் அதிகமாகத் தேவைப்படுகிறார்; பெரியாரும் அம்பேத்கரும் பார்ப்பனியத்தின் வேரெதிரி யாய் உயர்ந்துநிற்கும் ஆகப்பெரிய அடிக்கட்டுமானங்கள்; அம்பேத்கர் மீது அவதூறு பரப்பி அழிக்கப் பார்த்த பார்ப்பனக் கூட்டம், அது முடியாதுபோனதால் இப்போது அவரை அண்டிப் புகழ்ந்து உட்செரிக்க முயலுகிறது. ஆனால், தந்தை பெரியாரை ஒரு போதும் அவர்களால் உட்செரிக்க முடியாது என்பதால்தான் அழிக்க நினைக் கிறார்கள் என்று பார்ப்பனியத்தின் சூழ்ச்சிகளைத் தோலுரித்தவர்.

தொல் படிமங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்களிலிருந்து மட்டுமே வரலாற்றுத் தொன்மங் களைப் பார்க்கும் ஆய்வுச் சூழலை மாற்றி, நாட்டார் வழக்கு பற்றிய கதையாடல்களின் வழியாகப் பொதுமை நெறியில் நின்று விளிம்புநிலை மக்களின் பண்பாட்டில் இருந்து தமிழர் பண்பாட்டைக் கட்டியெழுப்பி மீட்டுரு வாக்கம் செய்தவர்.

தொ.ப அவர்கள் தமிழுக்கு வழங்கியுள்ள ஆய்வுக் கொடைகளுள் ஆகச்சிறந்தது ‘அறியப்படாத தமிழகம்’ எனும் தமிழரின் பண்பாட்டு வரலாற்றுத் தொடர்ச்சியை அறியவைத்த ஆய்வு நூல்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வில் தம் தனித்துவமான ஆய்வுப் பார்வையால் தமிழர் வரலாற்றுக்குப் பெரும்பங்காற்றிய தொ.ப. ஒரு தலைசிறந்த போராளியும் ஆவார். கல்லூரி ஆசிரியர் சங்கப் போராட்டங்கள் சிலவற்றில் தனி ஆளாய் நின்றுகூடப் போராடி வென்றவர்.

ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவக் கேடுகளை வரலாற்றோடு விளக்கி தமிழ்ப் பண்பாட்டுக்கும், திராவிட தமிழ்த்தேச அரசியலுக்கும் புது வெளிச்சம் பாய்ச்சியவர்.

மார்க்சியப் பெரியாரிப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் பெரியார் பிறந்த நாள் விழாப் பயணங்களில் நெல்லை - தூத்துக்குடி மாவட்டப் பயணங்கள் சிலவற்றுக்குத் துணைசெய்து தோழர் வே.ஆனைமுத்துவோடு நேரில் அளவளாவியர்.


2010, சனவரி 22-24 நாள்களில், பாளையங்கோட்டை தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டு மையத்தில், பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையும் செம் மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனமும் இணைந்து நடத்திய ‘தமிழ்நாட்டுத் தெல்லியல் ஆய்வுகள் : ஆதிச்ச நல்லூர் சிறப்பும் எதிர்கால திட்டமும்’ எனும் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றியதோடு, அக் கருத்தரங்கம் செம்மையாக நடைபெற தம் ஆய்வு மாணவர்களோடு எல்லா வகையிலும் துணைசெய்தவர்.


திராவிட இயக்கச் சிந்தனையாளர்களின் பேரெழுச்சியை வரலாற்றில் பதித்த நிகழ்வாய் அமைந்த 23.12.2018 திருச்சி கருஞ்சட்டைப் பேரணி - பொதுக்கூட்டத்தில், ஆட்கொல்லி நோயான நீரிழிவு நோய்க்கு ஆட்பட்டு, கால் நீக்கப்பட்டு நடக்கமுடியாத நிலையிலும் சக்கரநாற்காலியில் அமர்ந்த படியே வந்திருந்து முழங்கிய கொள்கை மறவர்.

பெரியாரின் பெருந்தொண்டரான அறிஞர் தொ.ப பெரியார் தம் சிந்தனையை நிறுத்திக்கொண்ட அதே நாளில், 24.12.2020-இல், தம் 70ஆம் அகவையில் தாமும் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார்.

**நம்மை எல்லாம் அவர் காட்டிய வழியில் சிந்திக்கச் சொல்லிவிட்டுத் தம் சிந்தனையை நிறுத்திக்கொண்டு மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்ட முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்கள் புகழ் ஓங்குக!**

- முனைவர் **முத்தமிழ்**





சனவரி
2021
31 ஞாயிறு
மாலை 03.00 முதல் 07.30

சென்னை செய்தியாளர் அரங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600005

# சிந்தனையாளன்
## பொங்கல் மலர் - 2021
## வெளியீட்டு விழா

வரவேற்புரை : தாம்பரம் **மா. சுப்பிரமணி** தலைமை : தோழர் **வாலாசா வல்லவன்**

<u>முன்னிலை</u>

தோழர் **இரா. கலியபெருமாள்** ● புலவர் **இரா. கலியமூர்த்தி** ● தோழர் **ஆ.கு. ஆறுமுகம்**
தோழர் **சீனி. பழனி** ● மருத்துவர் **சா.மா. அன்புமணி** ● தோழர் **கோவி இராமலிங்கம்**
தோழர் **முத்து.அன்பழகன்** ● தோழர் **ந. கருணாகரன்** ● தோழர் **செ. ஆனையப்பன்**
தோழர் **இரா. இரமணன்** ● தோழர் **பா.வை. அருண்மொழி** ● தோழர் **க. குப்புசாமி**

<u>மலர் வெளியிட்டுச் சிறப்புரை</u>

தோழர் **புனித பாண்டியன்** ஆசிரியர், 'தலித் முரசு'

<u>மலர் பெறுவோர்</u>

தோழர் **மோ.சி. சாங்கர்** ● தோழர் **மு. செயப்பிரகாசு** ● தோழர் **சீனு. சந்திரசேகரன்**
தோழர் **பொ. சுப்பிரமணியன்** ● தோழர் **கோ.மு. கருப்பய்யா** ● தோழர் **மா. முருகேசன்**
முனைவர் **ப. வெங்கடேசன்** ● தோழர் **குறளமிழ்தன்** ● தோழர் **தீ. கோபாலகிருட்டிணன்**
தோழர் **ப. வடிவேலு** ● தோழர் **தில்லிபாபு** ● புலவர் **சகாதேவன்**● தோழர் **மு. திருப்பதி**

<u>வாழ்த்துரை</u>

தோழர் **கோ. கோதண்டராமன்** ● தோழர் **துரை. கலையரசு** ● தோழர் **பா. மோகன்**

நன்றியுரை : மருத்துவர் **எ. செம்மலர்**

# சுயமரியாதை - சமதர்ம மாநாடு

வரவேற்புரை : தோழர் **நா. மதனகவி**

<u>தலைமை</u>

தோழர் **வே. ஆனைமுத்து**
ஆசிரியர், 'சிந்தனையாளன்', மா.பெ.பொ.க பொதுச்செயலாளர்

<u>சிறப்புரை</u>

பேராசிரியர் **த. செயராமன்**
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

<u>கருத்துரை</u>

தோழர் **க. முகிலன்** ● தோழர் **சி. பெரியசாமி** ● தோழர் **தி. துரைசித்தார்த்தன்**
முனைவர் **முத்தமிழ்** ● தோழர் **இரா. பச்சமலை** ● தோழர் **சா. குப்பன்**
தோழர் **இரா. திருநாவுக்கரசு** ● தோழர் **மு. சாமிநாதன்** ● தோழர் **சி. நடராசன்**

நன்றியுரை : தோழர் **இரா. பகுத்தறிவாளன்**

# மக்களாட்சி முறையில்

# மொழிவழித் தேசிய இனங்களின் விடுதலை

பேராசிரியர் **த. செயராமன்**
தலைமை ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு

மக்களாட்சி என்பது தற்கால உலகில் 167-க்கும் குறையாத நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஓர் அரசு முறை.

மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளத் தேவையான சட்டங்களை, நேரடியாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ, இயற்றிக் கொள்ளும் அதிகாரத்தை பெற்றிருப்பதுடன், பல்வேறு அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதுடன், தங்களுக்கான அரசு முறையையும், புரட்சியின்றி அதை மாற்றி அமைக்கும் முறையையும் ஒரு சட்டமாக வடிவமைத்துக்கொண்டு, பெரும்பான்மையோர் முடிவுக்கு ஏற்ப நடைமுறைப் படுத்தும் அரசு முறையாகும்.

"புரட்சி இல்லாமல் ஆட்சியை மாற்ற வகை செய்யப் பட்டிருக்கும் அரசு முறையே மக்களாட்சி" என்று அரசியல் அறிவியலாளர் கார்ல் பாப்பர் கூறுகிறார். இதில் உச்ச அதிகாரம் மக்களிடமே உள்ளது; அதை நேரடியாகவோ பிரதிநிதிகள் மூலமாகவோ பயன்படுத்தி மக்களே அரசை நிருவகிக்கிறார்கள்.

'மக்களாட்சி' என்ற சொல்லில் வரும் 'மக்கள்' என்ற சொல் ஓரினத்தை, ஒரு குடிவழிச் சமூகத்தை, ஒரு தேசிய இனத்தைக் குறிக்கிறது. கி.மு 5ஆம் நூற்றாண்டில், கிரேக்க நகர நாடாகிய ஏதென்ஸில் 'மக்களின் ஆட்சி' (Rule of the people) என்ற பொருள் தரக்கூடிய 'டெமாகிரசி' (Democracy) என்ற சொல்லால் தங்கள் அரசைக் குறித்தனர்.

'மக்கள்' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட தேசம், சமூகம் அல்லது குடி வழியினரைக் குறிக்கும். 'மக்கள்' என்ற சொல் ஒரு தேசிய இனத்தைக் (Nation) குறிக்கும் சொல். நாடு (State) என்பது ஓர்அரசு, இறையாண்மை இவற்றுடன் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் ஒரு மக்கள் அல்லது பல தேசிய இனங்களைக் குறிப்பதாகும்.

'நாடு' என்பது எவ்வளவு பெரியதாகவும், எத்துனை மொழிவழித் தேசிய இனங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு தேசம் அல்லது தேசியஇனம் என்பது ஒரே மொழியைத் பொதுமொழியாகக் கொண்ட ஒரு மக்கள் சமுதாயத்தைக் குறிக்கும்.

ஒரு தேசம் ஒரு நாடாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு நாடும் ஒரு தேசமாக இருப்பதில்லை. உதாரணமாக, வங்காளதேசம் என்ற ஒரு நாடு, ஒரு தேசம் ஆகும். இந்தியா ஒரு நாடு; தேசமல்ல. வங்காளிகளை ஒரு தேசிய இனம் அல்லது 'ஒரு மக்கள்' என்று குறிப்பிடுவது சரியானது. ஆனால் இந்தியா என்ற நாட்டில் இன்று நன்கு வளர்ச்சியடைந்த தேசங்கள் அல்லது தேசிய இனங்கள் 18-க்குக் குறையாமல் இருக்கின்றன. ஆகவே, இந்தியாவைத் தேசம் என்று குறிப்பிடுவது தவறானது.

'நேஷன்' (Nation) என்ற ஆங்கிலச்சொல், தேசம், தேசியஇனம் ஆகிய இரண்டையும் குறிக்கும். ஜோ.வி. ஸ்டாலின், "ஒரு தேசம் என்பது நான்கு அடிப்படைக் கூறுகளை கொண்டிருக்கும் ஒரு மக்கள் சமூகம்" என வரையறுத்தார். ஒரு பொதுமொழி, ஒரு தொடர்ச்சியான வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி, ஒரு பொதுவான பொருளாதார வாழ்வில் உருவான பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் 'ஓரினம்' என்ற உளவியல் - இவற்றைக் கொண்டிருக்கும் வரலாற்றுப் போக்கில் உருவான மக்கள் சமுதாயமே 'தேசம்' ஆகும். இவர்களைத்தான் 'ஒரு மக்கள்' என்று அரசியல் அறிவியல் குறிப்பிடுகிறது.

மக்களாட்சி என்பது ஒரு தேசிய இனம் ஒரு தேசத்தை அமைக்கும்போது மட்டுமே அதன் முழுமையான இலக்கணத்திற்கு ஏற்ப அந்த அரசு முறை அமைகிறது.

இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற தேசங்களில் மக்களாட்சி என்பது அந்த மக்களுக்கான உரிமைகளை உறுதி கூறுவதாக இருக்கிறது. இந்தியா போன்ற பல் தேசிய நாடுகளில், மக்கள் வாக்குகளைப் பயன்படுத்தி, தேர்தல் மூலமாக அரசைத் தேர்ந்தெடுத்தாலும், ஓர் இன மக்களின் மேலாண்மை, பிற தேசிய இன மக்கள் மீது சுமத்தப் படுகிறது. ஆகவே பல்தேசிய இன நாடுகளில் மக்களாட்சி என்பது கோளாறுகளைக் கொண்டதாக இருப்பதைக் காணலாம். இதற்குச் சிறந்த உதாரணம் இந்தியா.

### தேசங்களின் இருப்பை மறுக்கும் இந்தியா

உலகெங்கும் மக்கள் சமூகங்கள் தேசங்களாக அமைந்துள்ளன. இத் தேசங்கள் விடுதலை பெற்றவையாகவோ அல்லது விடுதலை கோருபவையாகவோ இருக்கின்றன. இவையன்றி, சிறுபான்மைத் தேசிய இனங்களாகவும், மொழிச் சிறுபான்மையராகவும் உலகெங்கும் வாழ்கிறார்கள். சிறியதாக இருந்தாலும் அல்லது பெரியதாக இருந்தாலும், தேசிய இனங்கள் விடுதலை பெற்ற ஒரு தேசத்தைப் படைத்துக் கொள்வதையே தங்களுடைய உன்னத இலக்காகக் கொண்டுள்ளன. உலகம் முழுவதுமே தாயகம் இல்லாத மக்களே இல்லை. தாயகத்தின் மீதான உறவை ஒரு மக்களிடமிருந்து பிரிக்க முடியாது. அவர்கள் வாழும் மண்தான் அவர்களுடைய வாழ்வை வடிவமைக்கிறது.

நிலம் தரும் சூழலே ஓரினத்தின் பண்பாட்டை உருவாக்குகிறது. ஒரு தேசத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்று அதனுடைய வாழ்நிலப்பரப்பு. அதை, "தொடர்ச்சி

யான வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி'' என்று ஜோ.வி. ஸ்டாலின் வரையறுப்பார்.

அரசியல் அறிவியல் பார்வையில், ஒரு தேசிய இனம் அல்லது தேசத்தை ''தொடர்ச்சியான நிலப்பரப்பில் வாழக்கூடிய ஒரு குடிவழி மக்கள் தொகுப்பு'' (A population of an ethnic unity inhabiting in a territory of geographic unity) என்று பர்கஸ் (Burgess) வரையறுக்கிறார்.

ஒரு தேசிய இனத்தின் இன்றியமையாக் கூறுகளுள் ஒன்று நிலப்பரப்பு. தாயகத்துடன் இருந்தால்தான் அவர்கள் ஒரு தேசிய இனம். இதற்கு விதிவிலக்காக இருந்தவர்கள் யூதர்கள். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இஸ்ரேல் என்ற அவர்களுடைய தேசம் வலுவாக அமைக்கப்படும் வரை தேசமற்ற யூதர்கள் ஒரு தேசிய இனமாகவே கருதப் பட்டார்கள்.

ஓர் இனம் விடுதலை பெற்று இருக்கிறதா இல்லையா என்பதை, அந்த இனத்தினுடைய மண் யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்தே முடிவு செய்யப்படும்.

இந்தியா விடுதலை பெற்றதாக 1947-இல் அறிவிக்கப் பட்டது. அதுவரை ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது அதிகாரம் செலுத்தினார்கள். இந்தியத் துணைக்கண்ட நிலப்பரப்பில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறியதைத்தான் 'இந்திய விடுதலை' என்று வரலாறு குறிப்பிடுகிறது.

ஓர் இனம், தான் வாழும் மண்மீது இறையாண்மையைப் பெற்றிருக்கிறது. தன் மண்மீதான இறையாண்மையை மீட் டெடுப்பதற்காகவே தேசிய இனங்கள் போராடுகின்றன. இலங்கையில் ஈழ மக்கள் உதிரியான உரிமைகளுக்காகப் போராடவில்லை. அவர்கள் தங்கள் மண்மீது தங்கள் இறையாண்மையை மீட்டெடுக்க வேண்டுமென்று போராடினார்கள்.

தமிழ்நாட்டில் எழுப்பப்பட்ட 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற முழக்கத்தின் சாரமும், இந்தியாவில் இருந்து தமிழ்நாடு விடுதலை பெறுவது என்பதுதான்.

தங்கள் தாயகத்தை இழந்த மக்கள் அடிமைகளாக அல்லது நாடோடிகளாக அல்லது அகதிகளாகக் கருதப் படுவார்கள். செவ்விந்தியர்கள் மற்றும் நீக்ரோக்கள் தாயகம் இழந்த மக்கள். தங்கள் தேசியஇனத் தகுதியைப் பெற முடியாதவர்கள்.

இன்று உலகில் 195 நாடுகள் உள்ளன. அவை மட்டு மின்றி, மேலும் பல தேசிய இனங்கள் தங்களுக்கான தேசங்களை அமைக்கப் பல்தேசிய இன நாடுகளில் இன்றும் போராடி வருகின்றன.

வரலாறு முழுவதுமே தமிழினத் தாயகம் பற்றியப் பதிவுகள் தமிழ் இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன.

தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார்,

*வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்*
*தமிழ்கூறு நல்லுலகத்து...*

என்று தமிழர்களுடைய வாழ்நிலப்பரப்பை பதிவு செய்துள்ளார். தொல்காப்பியர்,

*செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்*

என்றும்,

*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்*

என்றும் தமிழர்களுடைய வாழ்நிலப்பரப்பை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பதிவு செய்துள்ளார். காக்கைப் பாடினியார்,

*வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்*
*வேங்கடம் குமரி தீம்புனல் பௌவமென்று*
*அந்நான்குஎல்லை...*

என்று கூறுகிறார்.

பரிபாடல், 'தமிழ் நாட்டகம்' என்றும், பதிற்றுப்பத்து 'இமிழ்கடல் வேலித் தமிழகம்' என்றும், புறநானூறு 'வையக வரைப்பில் தமிழகம்' என்றும், அகநானூறு 'தமிழ்கெழு மூவர் காக்கும் மொழிபெயர் தேஎம்' என்றும், சிலப்பதிகாரம் 'தமிழ்நாடு' என்றும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களுடைய தொன்மைத் தாயக இருப்பைப் பதிவு செய்துள்ளன.

ஆனால், இந்தியத் துணைக்கண்டத்தில் உருவாக்கம் பெற்றுவிட்ட 'இந்தியா' என்ற நாட்டில் ஒரு மாநிலமாக உறுப்பு வகிக்கும் தமிழ்நாட்டின் தாயக உரிமையை இந்திய அரசியல் சட்டம் ஏற்கவில்லை. எந்தத் தேசிய இனத்தின் தாயகத்தையும் இந்தியா ஏற்கவில்லை. தமிழர்களை ஒரு தேசியஇனம் என்றோ, தமிழகம் தமிழர்களின் தாயகம் என்றோ இந்திய அரசியல் சட்டம் கூறவில்லை. இந்திய அரசியல் சட்டம் இவ்வாறு கூறுகிறது :

"We, the People of India, having solemnly resolved to constitute India into a sovereign socialist secular democratic Republic..."

''இந்திய மக்களாகிய நாம்...'' என்று தொடக்கத்திலேயே ஒட்டுமொத்தமாக மொழி இன அடையாளத்தை மறுத்துப் பேசுகிறது. இந்தியாவை ஒரு தேசம் என்று இந்திய அரசியல் சட்டம் கூறவில்லை. அதேபோது வேறு பல தேசங்கள் இந்தியாவில் இருப்பதையும் ஏற்கவில்லை.

இந்திய அரசியல் சட்டத்தின் முதல் பாகம், ''இந்தியா எனப்படும் பாரதம் பல மாநிலங்கள் ஒன்றிணைந்த யூனியன் (ஒன்றியம்)'' என்று குறிப்பிடுகிறது.

மேலும் அரசியல் சட்டம் கூறு 3 :

> ''ஒரு மாநிலத்தின் ஒரு பகுதியைப் பிரித்தும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை ஒருங்கிணைந்தும், அல்லது மாநிலங்களின் பகுதி களை இணைத்தும், அல்லது ஒரு மாநிலத்தின் பிரதேசத்தை இணைத்தும், புதிய மாநிலங்கள் அமைப்பதற்கும், ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பை அதிகரிப்பதற்கும், ஒரு மாநிலத் தின் பரப்பளவைக் குறைப்பதற்கும், ஒரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், எந்த மாநிலத்தி னுடைய பெயரையும் மாற்றுவதற்கும் உரிய சட்டம் இயற்று வதற்கு நாடாளுமன்றத்துக்கு உரிமை உள்ளது''

என்று கூறுகிறது.

இந்திய நாடாளுமன்றம் நினைத்தால் தமிழகத்தைப் பங்கிட்டுப் பல மாநிலங்களுக்கு வழங்கிவிடலாம்.

வளர்ச்சியடைந்த, 18-க்குக் குறையாத எண்ணிக்கை யில் இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இனங்கள் இருந்தாலும், அவற்றின் இருப்பையோ; அவற்றின் தாயக உரிமையையோ இந்திய அரசு ஏற்கவில்லை. நாடாளு மன்றத்தில் ஒரு வாக்கு அதிகம் இருந்தால் போதும், மாநிலங்களை அழித்துவிட முடியும்.

**தமிழ்நாடு ஓர் அடிமை தேசம்**

இந்திய அரசியலமைப்பின்படி ஒரு மாநிலத்தைக் கூறுபோட அல்லது காணாமல் ஆக்க, நாடாளுமன்றத்தில் மூன்றில் - இரண்டு பங்கு பெரும்பான்மை தேவையில்லை. இராஜ்யசபாவில் ஒரேஒரு வாக்கு அதிகம் இருந்தால் போதும் ( Simple Majority) இருந்தால் போதும்.

நாடாளுமன்றத்தின் மக்களவைக்கு அந்தந்த மாநிலங் களில் இருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவது போலன்றி, மாநிலங்களவையைப் பொறுத்தவரை, ஒரு மாநிலத்தின் பிரதிநிதியாக வேற்று மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த மேலவையில், ஒரு வாக்கு அதிகம் இருந்தாலே போதும், ஒரு மாநிலத்தைக் கூறு போட்டுவிடலாம்.

**இந்தியாவில் எந்த மொழி இனமாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் சிறுபான்மைதான்.**

தமிழ்நாட்டிலிருந்து 39 உறுப்பினர்களும், புதுவையி லிருந்து ஒரு உறுப்பினரும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக் கப் படுகிறார்கள். அதுபோலவே, மேலவையில் தமிழ் நாட்டியிருந்து 18 உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள். ஆனால், இவர்களால் எதையுமே சாதிக்க முடியாது. தமிழ்நாட்டுக் குள் திணிக்கப்படும் எந்தப் பேரழிவுத் திட்டத்தையும் இவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. வேண்டுகோள் வைப்பதையும், கூச்சல் போட்டு வெளிநடப்பு செய்வதை யும் மட்டுமே செய்யமுடியும்.

**இந்தி உறுப்பினர்களுக்கே நிரந்தரப் பெரும்பான்மை**

நாடாளுமன்றத்தில் இந்தி பேசுகிற மாநிலங்களின் உறுப்பினர்களே நிரந்தரப் பெரும்பான்மை வகிக்கிறார்கள்.

மக்களவையில் மொத்தமுள்ள 543 உறுப்பினர்களில் (2 நியமன உறுப்பினர்களையும் சேர்த்து) இந்தி பேசுகிற மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 255 பேர்.

இராஜ்ய சபை என்ற மாநிலங்களவையில் 245 உறுப் பினர்கள் உள்ளனர். இவர்களில் இந்தி பேசுகிற மாநிலங் களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை (12 நியமன உறுப்பினர் களையும் சேர்த்து) 114. இந்தி உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்தி சமற்கிருத மேலாண்மையைப் பாதுகாப்பதிலும் இந்திய மேலாண்மை என்ற பெயரில் பார்ப்பன-பனியா குசராத்தி பெரும் முதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதிலும் ஒரே நிலைபாட்டில் ஒற்றுமையாகவே இருக்கின்றனர். ஆகவே, இரண்டு அவைகளிலும் இந்திக்காரர்களின் மேலாண்மை நிரந்தரமாக நிலவுகிறது.

ஆகவே, சனநாயக நாடு என்று கருதப்படுகிற இந்தியா வில், தமிழ்நாடு என்றென்றும் நிரந்தரச் சிறுபான்மை யாகவே நாடாளுமன்றத்தில் இருக்கும். அதனாலேயே, அதன் தோல்விகள் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு தன் நிலப்பகுதியின் மீது உரிமை கொண்டாட முடியவில்லை. தமிழர்கள், தமிழ்நாட்டில் இந்திய அரசு அனுமதிக்கும் வரைதான் குடியிருக்கலாம். ஆகவே, தேசிய இனத்தினுடைய அடிப்படை உரிமை யாகிய தாயக உரிமை என்பது இந்தியாவில் அனுமதிக்கப் படவில்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

குடியேற்றத்தால் உருவாக்கப்பட்ட நாடுகளான கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில்கூட மக்களின் ஒப்புதல் இல்லாமல் மாகாணங்களை எதுவுமே செய்ய முடியாது என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இந்திய அரசமைப்புச் சட்டம் கூறு 19 : துணைப் பிரிவு 1-ன்படி "இந்திய ஆட்சிப் பரப்புப் பகுதி எதிலும் தங்கு தடையின்றி நடமாடுவதற்கும் குடியேறவும் இந்தியக் குடிமக்கள் அனைவரும் உரிமை உடையவர்கள்" என்று கூறுகிறது. ஆகவே, பிற மாநிலத்தவர்கள் தமிழகத்துக்குள் குடியேறும்போது அவர்களைத் தடைசெய்யத் தமிழ்நாடு அரசுக்கு உரிமை இல்லாமல் இருக்கிறது.

**தேசிய இனங்களின் உரிமையை மறுக்கும் இந்திய அரசியல் சட்டம்**

இந்திய அரசியல் சட்டம் ஒரு பல் தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. தேசிய இனங்களின் உரிமையை அடியோடு மறுக்கிறது. தோற்றத்தில் கூட்டாட்சி அரசியல் அமைப்பாக இருந்தாலும் முழுமையான ஒற்றையாட்சி அரசியல் அமைப்பாகவே அது இருக்கிறது. பல நாடுகளில் இரட்டைக் குடியுரிமை ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழகக் குடியுரிமையும் இந்தியக் குடியுரிமையும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. அதிகாரப் பிரிவினை என்பது ஒட்டுமொத்த அதிகாரங்களும் இந்திய அரசிடம் குவித்து வைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த அதிகாரங்களே மாநிலங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தின் 11-ஆவது பகுதியில் 'மத்திய-மாநில அதிகாரப் பிரிவினை' பேசப் படுகிறது. 7-ஆவது அட்டவணையில் 'அதிகாரப் பட்டியல்கள்' தரப்பட்டுள்ளன. இந்திய ஒன்றியத்தின் அதிகாரப் பட்டியலில் 97 இனங்களும் மாநிலப் பட்டியலில் 66 இனங்களும் பொதுப்பட்டியலில் 47 இனங்களும் தரப்பட்டுள்ளன. ஆனால், பொதுப் பட்டியலிலும் இந்திய ஒன்றியப் பட்டியலிலும் இந்திய அரசு அதிகாரம் செலுத்து கிறது. மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்களையும் அவ்வப்போது 'தேசநலன்' என்ற பெயரில் களவாடிக் கொள்கிறது.

**இந்திய மக்களாட்சி என்பது ஒரு பொய்மை**

இந்திய மக்களாட்சி என்பது ஒரு பொய்மை மக்க ளாட்சியாகக் காட்சியளிக்கிறது. முன்னமே குறைவான

அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அதிகாரங்களும் காலவோட்டத்தில் மத்திய அரசால் கைப்பற்றப்பட்டுள்ளன. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மாநில அரசை நிலைகுலைய வைக்கும் அதிகாரத்தை மய்ய அரசு எனப்படும் இந்திய அரசு பெற்றிருக்கிறது.

மாநில ஆட்சியைக் கலைக்கும் மய்ய அரசின் அதிகாரம் குறித்து அம்பேத்கர்,

> "ஏட்டில் முடங்கிக் கிடக்கும் ஒரு விதிமுறையாக இருக்குமே தவிர நடை முறையில் பயன்படுத்த வேண்டிய நிலைமை வராது"

என்றார். ஆனால், இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட முறைகள் மாநிலச் சட்டமன்றங்கள் முடக்கப்பட்டுள்ளன. மாநில அரசுகள் நீக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் நிர்ணய சபை 1946 திசம்பர் 9ஆம் நாள் கூடியது. தற்காலிகத் தலைவரான சச்சிதானந்த சின்கா,

> "உயர்தர மேதைகளின் சீரிய திறமையால் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கலாம்; இலட்சியங்களும் அறிந்த விதிமுறைகளும் அதில் மிகுதியாக இடம் பெற்று இருக்கலாம்; ஆனால், ஆட்சியாளர்கள் செய்கிற குற்றங்களின் ஆளும் அரசியல் களத்தில் குவிந்துவிடும்; ஊழலாலும் அதைவிட மக்கள் காட்டுகிற அக்கறையின்மை யாலும் சிறப்பான அரசியலமைப்புச் சட்டத்திற்கு அழிவு ஏற்படலாம்; மக்கள்தான் ஒரு மக்களாட்சியின் உண்மையான காப்பாளர்களாக இருக்கமுடியும்."

என்றார்.

1949 நவம்பர் 26-ஆம் நாள் கடைசிக் கூட்டத்தில் முழுமைபெற்ற அரசியலமைப்பை சமர்ப்பித்து மாமேதை அம்பேத்கர் பேசினார். சமூக பொருளாதார வளர்ச்சி பற்றி வலியுறுத்திய அவர்,

> "தற்போது வெள்ளையர் அரசாங்கம் வெளியேறி விட்ட நிலைமையில் நம் மக்களாட்சியின் குறைபாடு களுக்கு வேறு யார் மீதும் குற்றம் சுமத்தமுடியாது. நம் குறைபாடுகளுக்கு நாமேதான் பொறுப்பேற்க வேண் டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்"

என்றார்.

**தேசிய இனம் தன் இயற்கை வளத்தை, கனிமவளத்தைக் காக்க வழியில்லை**

இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையில் 40 தமிழர் களும், மேலவையில் 18 தமிழர்களும் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தின் நலன் எதையுமே சாதிக்க முடிய வில்லை. தமிழகத்தின் உரிமைகளைக் கேட்டுப் பெறவும் முடியவில்லை. உரிமைப் பறிப்பைத் தடுக்கவோ, அல்லது பறிக்கப்பட்ட உரிமையை மீட்கவோ இயலவில்லை.

2009-இல், ஈழத் தமிழர்கள் ஒன்றரை இலட்சம் பேர் படு கொலை செய்யப்பட்டபோது, தமிழ்நாட்டின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் டெல்லியில்தான் இருந்தனர். இன அழிப்பைத் தடுக்கமுடியவில்லை. ஈழப்போரை இந்திய அரசுதான் நடத்தியது. ஈழத் தமிழினம் அழிக்கப்பட்ட பிறகு, அது 'இனஅழிப்பு' (Genocide) என்று இந்திய அரசை ஏற்கச் செய்யவும் இயலவில்லை.

தமிழக மீனவர்கள் 575 பேர் கடலில் வைத்து, இலங்கை கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட நிலையில், இந்திய அரசை உரிய நடவடிக்கை எடுக்கச் செய்ய முடிய வில்லை. இலங்கைக் கடற்படையை இந்தியக் கடற்படை விரட்டவும் இல்லை; இலங்கை அரசுக்குக் கண்டனமும் தெரிவிக்கவில்லை. தமிழக மீனவர்களுடைய படகுகளை மீட்டுவரவும் முடியவில்லை. தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை.

காவிரி நடுவர்மன்றமும் உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்த பிறகும் கூட, காவிரி நீரைப் பெறமுடியவில்லை. காவிரித் தீர்ப்பை காங்கிரசு, பாஜக அரசு நடைமுறைப்படுத்த மறுத்திருக்கின்றன. தமிழகத்திற்கு தண்ணீர் தரக் கருநாடகம் மறுப்பதை இந்தியா வரவேற்கிறது. கருநாடகத்தின் அடா வடிப் போக்கை ஆதரிக்கிறது.

முல்லை பெரியாறு அணை வலுவாக இருக்கிறது என்று 5 நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு அளித்துவிட்ட பிறகும் கூட, 142 அடி நீரைத் தேக்க கேரளா அனுமதிக்கவில்லை. சிற்றணையைச் செப்பனிடப் பொருட்களைக் கொண்டு செல்ல கேரள வனத்துறை அனுமதிக்கவில்லை. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த இந்திய அரசு முன்வரவில்லை.

பாலாற்று நீரை ஆந்திர அரசு தடுப்பணை கட்டித் தடுத்திருக்கும் நிலையில், பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்டுகிறது. இந்திய அரசு இதைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை.

தடுத்து நிறுத்தச் செய்யும் வலிமை தமிழக நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு இல்லை.

எண்ணெய்-எரிவாயுத் திட்டங்களை சகட்டுமேனிக்கு காவிரிப் படுகையில் நடைமுறைப்படுத்தி, காவிரிப் படுகையே இந்திய அரசு அழிக்க இருக்கிறது. தமிழகத்தை அழித்தொழிக்கும் அனைத்து திட்டங்களையும் நடைமுறைப் படுத்த இந்திய அரசு முயற்சிக்கிறது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சேலம்-சென்னை எட்டுவழிச் சாலையைத் தன் திட்டமாக அறிவித் தாலும் அது இந்திய மற்றும் பன்னாட்டு பெரு முதலாளி களின் நலனுக்காக இந்திய அரசு கொண்டுவரும் திட்டம் என்பது நாடறிந்த ஒன்று. எட்டு மலைகள் அடித்து நொறுக்கப்பட இருக்கின்றன.

சேர்வராயன் மலையில் 53 இலட்சம் பாக்சைட், கஞ்சமலையில் 7.5 கோடி டன் இரும்பு, அரூர் மலையில் மாலிப்டினம், திருவண்ணாமலையில் இரும்பு, ஹேம டைட், மேக்னடைட், கவுத்தி - வேடியப்பன் மலைகளில் 47 விழுக்காடு இரும்புத்தாது என்று மிகப்பெரிய அளவில் இயற்கை வளம் சூறையாடப்பட இருக்கிறது.

இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலிமை தமிழக அரசுக்கோ, அல்லது தமிழகத்திலிருந்து தில்லி செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ இல்லை.

வீடும், காடும் காணாமல் போக இருக்கின்றன. வயலும், வளமும் சூறையாடப்படுகின்றன. ஜிண்டால், அதானி, வேதாந்தா நிறுவனங்கள், ஜப்பான், தென் கொரியா நாட்டு நிறுவனங்கள் தமிழகத்தின் மீது படையெடுத்து வரு கின்றன. தமிழக மக்கள் அடையாள எதிர்ப்பு மட்டுமே காட்டமுடியும். அவர்களை ஒடுக்குகின்ற வேலையை இந்திய அரசின் ஏவல் அரசாக இருக்கும் தமிழக அரசு செய்துவருகிறது.

தூத்துக்குடியில் தாமிர உருக்கு ஆலை அப் பகுதி யையே மரணபூமி ஆக்கும் நிலையில், மக்கள் ஆலையை மூடக்கோரி போராடினர். தமிழக அரசே 14 பேரைச் சுட்டுக் கொன்றது.

**இந்திய அரசின் கட்டளையை நிறைவேற்று வதைத் தவிர தமிழக ஆட்சியாளர்களுக்கு வேறு வழியில்லை. ஆட்சி அதிகாரத்தைக் காத்துக்கொள்ள எதையும் செய்யத் தயாராக இருக்கின்றன தமிழகத் தலைமைகள்.**

● *(தொடரும்)*

# அயராத உழைப்பாளி கூத்தூர் ஆ.இராமலிங்கம் மறைந்தார் !



பெரியாரியல் அறிஞர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களின் அன்புக்குரியவர், பெரியாரியச் சிந்தனையாளர், மேனாள் தோட்டக்கலை உதவி இயக்குநர், பெரம்பலூர் மாவட் டம், கூத்தூர் அக்ரி. இரா. நலங் கிள்ளி தேன்மொழி அவர் களின் தந்தையார், மேனாள் வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தலைவர், அயராத உழைப்பாளி 90 வயதான முதியவர் ஆ. இராமலிங்கம் அவர்கள், சில காலம் உடல் நலிவுற்றிருந்த நிலையில் 31.12.2020 வியாழனன்று காலை 7.00 மணியளவில் காலமானார். அன்னாரை இழந்து வாடும் அவரது வாழ்விணையர் நாகமணி அம்மையார், மகள்கள் வெண்ணிலா பிரகாசு, கார்மேகம் ஆறுமுகம், மருமகள் தேன்மொழி நலங்கிள்ளி, பெயர்த்திகள் சாணக்கியா எழிலரசன், சாண்டில்யா, செல்சியா மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

.- **'தமிழ்க்களம்' இளவரசன்**

# தோழர் இளவேனில் இயற்கையானார் !



பொதுவுடைமைப் போராளி, ஞானச்செருக்கான எழுத்தாளன், கவிஞர், ஓவியர், இதழாளர் எனப் பன்முக ஆற்றலாளர் தோழர் இள வேனில் 02.01.2021அன்று அவரது 70ஆம் அகவையில் இயற்கையானார் என்பது மிகவும் துயரமானது.

தன் இளம் வயதிலேயே பொதுவுடைமை இயக்கத்தில் தன்னைப் பிணைத்துக்கொண்டு 'கார்க்கி' இதழ் மூலமாக தன் எழுத்துவீச்சால் இளைஞர்களை ஈர்த்தவர். மார்க்சியப் பெரியாரிய அடித்தளத்தை 1980-களிலேயே வரித்துக் கொண்ட முன்னோடி கவிஞர் இளவேனில்.

மார்க்சியர்கள் வரட்டுவாதிகளாக சித்தரிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராகக் கலை இலக்கியத்தைக் கருவியாக ஏந்தியவர். நூல்களின் முகப்பு அட்டைகளை வடிவமைத்துத் தருவதில் சிறந்த ஓவியர் எனப் பலரால் பாராட்டப்பெற்றவர்.

கவிதையோ உரைநடையோ ஓவியமோ அவரது ஆக்கங்கள் கவித்துவமானது என்று புகழப்படுகிறது.


'புயலுக்கு இசை வழங்கும் பேரியக்கம்', 'வாளோடும் தேன் சிந்தும் மலர்களோடும்', 'புரட்சியும் எதிர்ப்புரட்சியும்', 'ஆத்மா என்றொரு தெருப்பாடகன்', 'காருவாகி', 'கார்க்கி எனும் புயற்பறவை', 'இங்கேயும் ஒரு பூ மலரும்' போன் றவை அவரின் படைப்புகளில் முதன்மையானவை.

மக்கள் கவிஞர் இன்குலாப் அவர்களின் முதல் கவிதை தொகுப்பிற்கு இளவேனில் எழுதிய 'மகரந்தத்திலிருந்து துப்பாக்கி ரவைகள்' முன்னுரை குறிப்படத்தக்கது. 'ஆத்மா என்றொரு தெருப்பாடகன்', ஆத்மா என்ற பெய ருடைய திராவிட இயக்கத் தொண்டனைக் கருவாகக் கொண்ட நூல். தஞ்சை பெருவுடையார் கோயில் சிற்பி 'சாரப்பள்ளம் சாமுண்டி' என்ற சிறுகதையைத் திரைக் கதையாக்கி, 'உளியின் ஓசை' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். 'ஆனாரூனா' என்றழைக்கப்பட்ட தமிழ்ச்சான்றோர் பேரவை அருணாசலம் அவர்கள் நடத்திய 'நந்தன்' இதழினைக் கடைசி இரண்டு ஆண்டுகள் பொறுப்பேற்று நடத்தினார், இளவேனில்.

கோவை கு.இராமகிருட்டிணன் தொடங்கிய 'பெரியார் நாடு' இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். பொது வுடைமைக் கட்சியில் இருந்தபோது ஒரு பொதுக்கூட்ட மேடையில் தோழர் வி.பி.சிந்தன் முன்னிலையில் தன் திருமணத்தை நிகழ்த்திக் கொண்டவர்.

பன்முக ஆற்றலாளர், சீரிய சிந்தனையாளர் தோழர் இளவேனில் மறைவு ஈடுசெய்ய முடியாதது. தோழருக்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் செவ்வணக்கம் செலுத்துகிறோம்.

**- சா. குப்பன்**



# இந்திய அரசமைப்புச் சட்டம் சமூகநீதிக்கு எதிரானதா?

குட்டுவன்

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானபோது இருந்த மக்கள் தொகை அரசியல் சமூகப் பொருளாதாரச் சூழல் இன்று முற்றிலும் மாறுபட்டு வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் உருவான பின்பு 1956-இல் மொழி வழி மாநிலங்கள் அமைந்தன. தற்போது இந்தியாவில் 28 மாநிலங்களும் 8 ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களும் உள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஒரு நாட்டினுடைய பிரதமர் நாடாளுமன்றத்தின் வழியாக முடக்கி வைக்க முடியும் என்பதை 1975-இல் இந்திராகாந்தி அம்மையாரால் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலை மெய்ப்பித்தது. மீண்டும் மொரார்ஜி தேசாய் தலைமையில் அமைந்த ஜனதா ஆட்சி நெருக்கடி காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்களைத் திருத்தி மீண்டும் ஒரு நெருக்கடிகாலச் சூழல் இந்தியாவிற்கு ஏற்படக்கூடாது என்ற நிலையை உருவாக்கியது. இருந்தாலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட பல கட்சிகளின் கூட்டணியான ஜனதா கட்சியே, புது தில்லியின் நிருவாகத்திலிருந்த உயர் சாதியினரால் நெருக்கடி காலத்தில் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு எடுத்துச் செல்லப்பட்ட கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு எடுத்துவரவில்லை.

அண்ணல் அம்பேத்கர், “இந்திய அரசமைப்புச் சட்டமானது காலத்தின் சூழ்நிலைகளின் தேவைக்கேற்ப ஒற்றையாட்சி முறையாகவும் கூட்டாட்சி முறையாகவும் இருக்கும்” என்றும், “சாதாரண காலங்களில் கூட்டாட்சி முறையாகவும் போர்க்காலங்களில் ஒற்றையாட்சி முறையாகவும் இயங்கிடும் வண்ணம் அரசமைப்புச் சட்டமானது வடிவமைக்கப் பெற்றுள்ளது. குடியரசுத் தலைவர் ஓர் ஆணையைப் பிறப்பித்தால் மறுகணமே மொத்த சூழ்நிலையும் மாறி நாடே மத்திய ஆட்சி முறைக்கு மாறிவிடும்” என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், 1990-களுக்குப் பிறகு பொருளாதாரம் நிருவாகம், நீதி போன்ற துறைகளில் ஏற்பட்ட அடிப்படையான தலைகீழ் மாற்றங்களை அரசமைப்புச் சட்ட அவையில் பங்குபெற்றோர் கணிக்கக்கூட வாய்ப்பில்லாமல் நிகழ்வுகள் நடந்து வருகின்றன.


நிருவாகத் துறையைப் பற்றி அரசமைப்புச் சட்ட அவையில் பேசிய உறுப்பினர் மகபுப் அலி பெய்க் அவர்கள், “மத்தியில் ஒரேயடியாக அதிகாரங்கள் குவிக்கப்படுவதால் கூட்டாட்சி முறை மத்திய ஆட்சி முறையாக மாற்றப்படும். இதன் விளைவாக சர்வாதிகார ஆட்சி ஏற்படும்” எனக் கடுமையாக எதிர்த்தார். இவரின் கணிப்பு தற்போதைய மோடி ஆட்சியில் நடைபெற்று வரும் அரசியல் நிகழ்வுகள் முழுமையாக மெய்ப்பித்து விட்டது. அண்ணல் அம்பேத்கர் இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் கடுமையாக விமர்சனம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு 1951-லேயே தள்ளப்பட்டார்.

இலண்டன் பல்கலைக்கழகத்தில் உயர் ஆய்வை மேற்கொண்ட உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த ஆய்வாளர் திருபுர்தமன் சிங் எழுதிய, ‘அரசமைப்புச் சட்ட முதல் திருத்தத்தின்போது புயலைக் கிளப்பிய 16 நாட்கள்’ (Sixteen Stormy Days - The Story of the First Amendment to the Constitution of India by Tripurdaman Singh, Penguin Random House, India, 2020) என்ற நூல் இதுவரை வெளி வராப் பல உண்மைகளை வைக்கிறது.

அந் நூலில் 1920-களில் இருந்து பின்பற்றப்பட்ட சமூகநீதி எவ்வாறு குலைக்கப்பட்டது என்பதைப் பல புள்ளி விவரங்களோடு சிங் விளக்கியுள்ளார். சென்னை மாகாணத்தில் 1920-லிருந்து 1930 வரை பின்பற்றப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கை அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செய்த பார்ப்பனர்களைப் புறந்தள்ளியது என்று குறிப்பிடுகிறார்.

குறிப்பாக “இடஒதுக்கீடு என்கிற ஒரு கருவி பின் தங்கியோருக்கும் புறந்தள்ளப்பட்ட வகுப்பினருக்கும் மாநில நிருவாகத்தில் கல்வியிலும் வேலை வாய்ப் பிலும் அதிக எண்ணிக்கையைப் பெற்றுத்தந்த ஒரு முற்போக் கான அரசியல்” (Reservation as an administrative tool and radical politics based on securing great representation for backward class and marginalized group in the state apparatus, as well as great push for De-brahminizatinon, thus formed an enduring legacy in Tamil politics, p.44) எனக் குறிப்பிடுகிறார்.

மேலும், இட ஒதுக்கீடு கொள்கையை முழு அளவில் ஏற்றுக்கொள்ள மறுத்த காங்கிரசுத் தலைமையும் அரசமைப்புச் சட்ட முதல் திருத்தத்திற்கு ஆதரவாகத் தமிழ் மாகாணத்திலிருந்து செயல்பட வேண்டிய அரசியல்




அழுத்தம் ஏற்பட்டது.

சான்றாக, சென்னை மாகாண உயர்நீதிமன்றத்தில் அரசு சார்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், பொறியியல் கல்லூரிகளில் இடஒதுக்கீடு ஆணை பின்பற்றப்பட்ட போது, மொத்த இடங்களில் 77 பார்ப்பனர்களுக்கும், 224 பார்ப்பனர் அல்லாதவருக்கும், 51 கிறித்தவர்களுக்கும், 26 இசுலாமியர்களுக்கும், 26 இடங்கள் தாழ்த்தப்பட்ட பிரி வினருக்கும் அளிக்கப்பட்டன.

இந்த இடஒதுக்கீடு ஆணை பின்பற்றப்படாத சூழலில் மொத்த இடங்களில் 249 பார்ப்பனர்களுக்கும், 112 பார்ப்பனர் அல்லாதவர்களுக்கும், 22 கிறித்தவர்களுக்கும், 3 இசுலாமியர்களுக்கும், தாழ்த்தப்பட்டப் பிரிவினருக்கு ஒரு இடம் கூட இல்லாத நிலையில் இருந்தது.

எனவே, இடஒதுக்கீடு முறையை நீதிமன்றம் எவ்வித இடையுறுகளின்றி நடைமுறைபடுத்த ஆணை பிறப்பிக்க வேண்டும் என அன்றைய தமிழ்நாடு அரசு வாதிட்டது.

“1950-இல் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த சில மாதங்களிலேயே பீகார் உத்திரபிரதேச நிலச்சீர்த்தச் சட்டங்கள் செல்லுபடியாகவும், சென்னை மாகாணத்தில் இடஒதுக்கீடு ஆணை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற் காகவும் அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தத்தைக் கொண்டுவருவது என்பது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும்” என நேருவின் அமைச்சரவையில் இருந்த பின்னாளில் ஜனசங்கத்தை உருவாக்கிய ஷியாமா பிரசாத் முகர்ஜி உட்பட பலர் கடுமையான முறையில் எதிர்த் தார்கள். இந்த இட ஒதுக்கீடு ஆணை பின்பற்றபட வேண்டும் என அன்றைய சென்னை மாகாண காங்கிரசுக் கட்சியின் முதலமைச்சரான குமாரசாமி ராஜா பிரதமர் நேருவிற்கு ஒரு மடல் எழுதினார்.

அம் மடலில் இட ஒதுக்கீடு ஆணையைப் பின்பற்ற வேண்டிய சூழல் சென்னை மாகாணத்தில் இருக்கிறது என்பதையும் வலியுறுத்தி குறிப்பிட்டிருந்தார். அச் சூழலில் நேரு அந்த மடலைப் புறக்கணித்தார். பின்பு தமிழ்நாட்டில் வேலை நிறுத்தங்களையும் போராட்டங்களையும் பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் நடத்தினர். இந்தப் போராட்டங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்த காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு அவசரக் கூட்டத்தைக் கூட்டி இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாக மத்திய அரசு தலையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

தந்தை பெரியார் தலைமையில் நடந்த போராட்டத்தில் திமுக உட்பட பலர் கலந்து கொண்டனர். தந்தை பெரியார் நடத்திய பெரும் ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான வர்கள் கலந்துகொண்டனர். போராட்டத்தின் முடிவில் தந்தை பெரியார், “சென்னை மாகாண உயர்நீதிமன்றம் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக அளித்த தீர்ப்பைப் போன்றுதான் உச்சநீதிமன்றமும் தீர்ப்பு வழங்கும். இதற்கு ஒரே வழி அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதுதான்” என்று உரை நிகழ்த்தினார்.

“அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவில்லை என்றால் மீண்டும் தனி திராவிட நாடு வலியுறுத்தப்படும். திராவிட நாட்டில் தென்னக மாநில மக்களின் நலன்கள் பாதுகாக்கப் படும்” என்று வலியுறுத்தினார்.

இந்தப் பேச்சை வெளியிட்டு அன்றைய Times of India நாளேடு அலறியது. இந்த நிகழ்விற்குப் பிறகுதான் நேரு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு முன் வந்தார் என சிங் குறிப்பிடுகிறார்.

அண்மையில் வெளிவந்த ‘இந்தியா மறந்த வழக்குகள்’ (The Cases that India Forgot) என்ற நூலில் சிந்தன் சந்தரசூட் என்ற ஆய்வாளர் இதுவரை நாம் அறியாத பல தகவல் களை வெளிக்கொண்டு வந்துள்ளார். இவரும் வட இந்தியாவைச் சேர்ந்தவர். ஆக்ஸ்போர்ட் அமெரிக்க யேல் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்தவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இந்நூலில் அரசியல், பாலியல், வன்கொடுமை, மதம், நாட்டுப் பாதுகாப்பு ஆகிய நான்கு தலைப்புகளில் நீதிமன்றங்களில் நடந்து முடிந்த 10 வழக்குகள் பற்றி ஆய்வு செய்துள்ளார்.

இடஒதுக்கீடு ஆணை பற்றிய வழக்கை ‘மதம்’ என்ற தலைப்பின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். குறிப்பாக உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின் முடிவில் நான்கு கருத்துகள் கவனத்தை ஈர்ப்பவையாக உள்ளன. இந்த வழக்குகளில் விண்ணப்பத்தாரர்களில் ஒருவரான திருமதி சம்பகம் துரைராசன் மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்யாதவர். எனினும், இந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தபோது அவரின் வேண்டுகோளை ஏற்கச் சற்றுத் தயங்கிய உச்சநீதிமன்றம் பின்பு தயக்கத்தைப் புறந்தள்ளி அம்மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது. இவ்வழக்கில் தனது உரிமையைக்கோர வாய்ப்பில்லாததால், தான் சார்ந்த பிராமண சமூகத்தின் நலனை வலியுறுத்து வதற்காகவே இந்த வழக்கை சம்பகம் துரைராசன் பதிவு செய்தார்.

தற்போது நீதிமன்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக வழக்கைப் பதிவு செய்யாவிட்டாலும் அவர் களின் சார்பில் பொதுநல வழக்கு நீதிமன்றங்களில் பதிவு

செய்யும் முறை 1979-க்குப் பிறகுதான் வந்தது. அதற்கு முன்பு அரசாணையாலோ அல்லது வேறு நிறுவனங் களால் பாதிக்கப்பட்டவர்களோ மட்டும்தான் வழக்கை உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங்களில் பதிவு செய்யும் முறை இருந்தது.

இந் நூலாசிரியர் சிந்தன் சந்திரசூட் ஆய்வாளர் திருபுர்தமன் சிங் போன்று இடஒதுக்கீடு ஆணையின் சமூக அரசியல் விளைவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. சட்டரீதியான கூறுகளை மட்டும் எடுத்துக்கொண்டு இந்தப் பத்து வழக்குகளை ஆய்வு செய்துள்ளார். எனவேதான் சம்பகம் துரைராசன் வழக்கு பொதுநல வழக்குகளுக்கு முன்னோடி எனக் குறிப்பிட் டுள்ளார்.

முதலில் சம்பகம் துரைராசன் வழக்கை ஏற்றுக் கொள்ளத் தயங்கிய உச்சநீதிமன்றம் பின்பு ஏன் ஏற்றுக் கொண்டது என்றால் வழக்காடியவர் அல்லாடி கிருஷ்ண சாமி ஐயர். அரசமைப்புச் சட்ட அவையில் அமைந்த 6 குழுக்களில் இருந்தவர். இவ் வழக்கினை உச்ச நீதி மன்றத்தில் தயக்கத்தோடு ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதியும் ஒரு பார்ப்பனர். இதிலிருந்து பார்ப்பனர்கள் வைத்ததுதான் சட்டம்; அவர்கள் எடுப்பதுதான் நிருவாக முடிவு; ஏற்றுக்கொள்வதுதான் நீதித்துறையின் கடமை என்ற ஒரு நிலை அன்று மட்டுமல்ல இன்றும் தொடர்கிறது.

இந்த வழக்கில் அண்ணல் அம்பேத்கர் எவ்வளவு சிறந்த முறையில் நாடாளுமன்றத்தில் விவாதம் செய்தார் எனக் குறிப்புகள் இந்நூலில் உள்ளன. அண்ணல் அம்பேத்கர், “உச்சநீதிமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின் கருத்துகளைத் தவறாகப் புரிந்துகொண்டு விளக்கம் அளித்துள்ளது” என வலுவான விவாதத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். “அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் முன்னாள் தலைவர் என்ற முறையில் உச்சநீதிமன்றம் அரசமைப்புச் சட்ட விதிகளைப் பற்றி அளித்த விளக்கமும் முறையும் முற்றிலும் தவறானதாகும். நான் நீதிமன்றத்தில் வழக்குகளை எடுத்து வாதிடும்போது தலைமை தாங்குகிற நீதிபதியிடம் அழுத்தமான முறையில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வேன். வழங்குகிற தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்வேன். ஆனால், அந்தத் தீர்ப்பை மதிக்கவேண்டும் என்ற நிலை எனக்கு இல்லை. ஒரு நீதிபதி வழங்குகிற தீர்ப்பு தவறானது என்று சொல்கிற கருத்துரிமை ஒவ்வொரு வழக்கறிஞருக்கும் உண்டு. அந்தக் கருத்துரிமையை நான் விட்டுத்தரவே முடியாது” என அண்ணல் அம்பேத்கர் இட ஒதுக்கீடு ஆணைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டார்.

நேரு அரசியல் கருத்தை முன்மொழிந்தார் என்றால் அம்பேத்கர் சட்டக் கருத்தை முன்னிறுத்தினார் (If Ambedkar presented the legal case, Nehru presented the political case). இந்நூலாசிரியர் சிந்தன் சந்திரசூட் Times of India நாளேட்டில் வெளி வந்த பின்வரும் செய்தியை வெளியிட்டு, “நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங் களில் அம்பேத்கரின் உரைகள் ஏறக்குறைய ஒன்றரை மணிநேரம் நீடித்தது. அம்பேத்கரின் உரை நாடாளுமன்றம் கண்ட

> “
> **நான் நீதிமன்றத்தில் வழக்குகளை எடுத்து வாதிடும்போது தலைமை தாங்குகிற நீதிபதியிடம் அழுத்தமான முறையில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வேன். வழங்குகிற தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்வேன். ஆனால், அந்தத் தீர்ப்பை மதிக்கவேண்டும் என்ற நிலை எனக்கு இல்லை.**
> **ஒரு நீதிபதி வழங்குகிற தீர்ப்பு தவறானது என்று சொல்கிற கருத்துரிமை ஒவ்வொரு வழக்கறிஞருக்கும் உண்டு. அந்தக் கருத்துரிமையை நான் விட்டுத்தரவே முடியாது.**
> ”

விவாதங்களில் மிகமிகச் சிறந்த உரை” எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்று புதிய புதிய தரவுகளை இந் நூலாசிரியர் அளித்துள்ளார். ஒன்று மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்ட ஆரியப் பார்ப்பனர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு நீதி வழங்க மறுப்பார்கள்; முடிந்த அளவிற்கு ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் கல்வி வேலை வாயப்புகளை அடித்து ஒடுக்குவார்கள் என்பதை இந்த வழக்குகளின் உண்மை நமக்குப் புலப்படுத்துகிறது.

மேலும், 2014-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மோடி தனது அதிகாரத்தை வைத்து நீதித்துறை, ஊடகத்துறை, அரசியல் தலைவர்களையும்; நடுவண் அரசின் வருமான வரித் துறை, புலனாய்வு அமைப்பு, அமலாக்கத் துறை போன்றவற்றை ஆயுதங்களாக மாற்றி அச்சுறுத்துகிற நிலைமை இன்றைய ஜனநாயகத்தின் நடைமுறையாகவே மாறிவிட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் காஷ்மீர் மாநிலத் திற்கு அளிக்கப்பட்ட 370ஆவது பிரிவின்படி அச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றால் காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தில் திருத்தத்திற்கு ஆதர வாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், உண்மையில் நடந்தது என்ன? இந்த வழக்கை இதுவரை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளாமல் காலந்தாழ்த்தி வருகிறது. 29 மாநிலங்கள் 28 மாநிலங்களாக மாறிவிட்டன. காஷ்மீர் ஜம்மு, லடாக் என்று ஒன்றிய அரசின் பிரதேசங்களாக மாற்றப்பட்டு உள்ளாட்சித் தேர்தலும் நடத்தப்பட்டுள்ளது. மத ரீதியாகப் பிளவுபடுகிற நிலையைத்தான் இத்தேர்தல் முடிவுகளும் காட்டுகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மதச் சார்பின்மை முற்றிலுமாகச் சிதைக்கப்பட்டு வருகிறது. இதை உச்சநீதிமன்றமும் வேடிக்கை பார்க்கிறது.

அண்மையில் உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் புசண் சென்னை தில்லி உயர்நீதிமன்றங்களில் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற நீதியரசர் அஜித் குமார் ஷா அவர்களும் “உச்ச நீதிமன்றத்தின்

நம்பிக்கைத்தன்மை வீழ்ந்து வருகிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய், ''உச்ச நீதிமன்றத்தில் உயர் சாதியினரின் செல்வாக்குப் பெருகி வருகிறது. அது நாட்டின் நலனிற்கு நல்லதல்ல'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய உச்சநீதிமன்றத்தில் 98 விழுக்காடு நீதியரசர்கள் பார்ப்பனச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். 1951-இல் அண்ணல் அம்பேத்கர் போன்று நாடாளுமன்றத்திலேயே ''உச்சநீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புகள் தவறாக இருந்தால் அவற்றை மதிக்க வேண்டியதில்லை'' எனக் கூறுகிற ஆளுமையும் வீரமும் இன்று பல சட்ட வல்லுநர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இல்லை.

பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் எனக் கூறி உயர் சாதி வகுப்பினர்க்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தது அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரானது என உச்ச நீதிமன்றத்தில் சில மாநில அரசுகள் வழக்குகளைப் பதிந்தும் அதற்குத் தடை விதிக்காமல் பாஜக ஆளுகின்ற மாநிலங்களில் உடனடியாக இச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முற்படுகிற சூழ்நிலையை உச்சநீதிமன்றம் ஏற்படுத்தி உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்களில் கீழமை நீதிமன்றங்களும், உயர்நீதிமன்றங்களும், இந்திய அளவில் உச்சநீதிமன்றமும் உள்ளன. ஆனால், உச்ச நீதிமன்றம்தான் அரசுகள் இயற்றுகின்ற சட்டங்களை ஆய்வு செய்து சட்டப்படிச் சரியானதா? தவறானதா? எனத் தீர்ப்பளிக்க வேண்டிய உயர் பொறுப்பில் உள்ளது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் கடமைகளைச் சாதி, மதம் கடந்து நடுநிலையோடு தீர்ப்புகளை வழங்குகிறார்களா? என்ற ஐயம் அண்மைக்காலமாக எல்லோரிடத்திலும் ஏற்பட்டு வருகிறது.

எனவே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பல பிரிவுகள் உயர் சாதி, உயர் வர்க்க நலனிற்காகவே செயல்படுத்தப்படுகிற சூழல் அரசியல், மதவாத அரசியல் அழுத்தத்தால் நிலைபெற்று வருகிறது. மேலும், 2020 பிப்ரவரி மாதம் வரை 3.65 கோடி வழக்குகள் நீதிமன்றங்களில் தீர்ப்புகளுக்காகப் பல ஆண்டுகளாகக் காத்துக் கொண்டுள்ளன.

2020 ஆகத்து மாதத் தரவுகளின்படி உச்சநீதிமன்றத்தில் மட்டும் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 63,000. மேற்கண்ட வழக்குகளின் தரவுகள் நீதிமன்றங்கள் சமூகநீதியைப் புறந்தள்ளுகின்றன என்பதையே சுட்டுகின்றன.

**இத்தகைய நிலை மாற, சமூக நீதி அனைத்துப் பிரிவினருக்கும் கிட்டிட, உச்சநீதிமன்றத்தின் அதிகார எல்லையை மறுவரையறை செய்யவும், இந்தியா முழுவதும் நீதிபதிகள் நியமனங்களில் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றுவதற்கும் ஏதுவாக அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.**

●

## வெற்றிவாகைச் சித்தார்த்தன்

தண்டூன்றும் கிழவர்கள், பிணியாளர்கள்,
காப்பிணங்கள், துறவோர்கள் ஆகியோரைக்
கண்டு, ஊன்றும் உலகியலை உணர்ந்துகொண்டால்
கவின்மகனே (சித்தார்த்தன்) துறவேற்பான் என்று
மன்னன் (சுத்தோதனன்)
வண்டூன்றும் மலர்ச்சோலைப் போன்ற மூன்று
மாளிகையில் அரண்மனைக்குள் வாழ வைத்தான்
மொண்டூற்றும் எழில்மேனிப் பாவையர்கள்
மொய்த்தின்பக் கலைவிருந்தில் 'மகனைத்' தோய்த்தார்.

மணம்புரிந்து (யசோதரை) மகன்பெற்ற (இராகுலன்)
சித்தார்த்தன்தான்
மண்ணுலகில் துயர்க்காட்சி பலநாள் கண்டு,
'கணம் நடந்துத காலமோட மாந்தன் வாழ்வில்
கவலைவரும்; பிணிமூப்புச் சாவு நேரும்.
பணம்குவித்து மேலவற்றைத் தடுக்கும் ஆற்றல்
மன்னருக்கும் இல்லை'யெனும் உண்மை ஆய்ந்தான்
உணங்குமிந்த உலகியலில் நீங்கி இன்ப
உயரறிவின் ஒளிநெறியைத் தேடத் தேர்ந்தான்.

'வெண்கொற்றக் குடையாட்சி விடுத்துச் செல்வன்
வெங்கானம் செல்வானோ' என்று மன்னன்
கண்கொற்ற எழிற்பெண்கள் சூழ வைத்தான்
கலைநுகர்வை அவர்களீந்தும் துயிலில் ஆழ்ந்தான்
பெண்சுற்றம் அதுகண்டு தூங்கலானார்
பின்னிரவில் திருமகனே விழித்துப் பார்த்தான்.
'விண்பற்றும் அவ்அழகியரா இவர்கள்?'
வாய்பிளந்து ஒழுகுமெச்சில் விகாரம் கண்டான்.

நீருக்கும் நுரைவாந்தி உண்டு; நீரில்
நின்றுள்ள குமிழிக்கும் நொடிச் சாவுண்டு
பாருக்குள் மானிடனும் அவைபோலாவான்
பாழுலகில் நிலைத்திருக்கப் 'புதிது' காண
யாருக்கும் சொல்லாமல் (அவ்) இரவிலேயே
அரண்மனையை அரசமகன் நீங்கிச் சென்றான்.
ஊருக்கு வெற்றி தருமுன்னே தன்னுள்
ஊறழித்து வெற்றி காணத் துறவு பூண்டான்.

உடல்வருத்தி உணவொழித்துத் துறவோர் கொள்ளும்
ஒருநோற்றல் வழிச்செலாது தனது உள்ளக்
கடல் எழுப்பும் மாசு அலைகள் முற்றும் நீக்கிக்
கடுந்தூய்மைக் கண்டபின்பு, காட்டில் தேடி
அடல்தரும் ஓர் அரசமரம் (போதிமரம்) கீழமர்ந்து
அகம்நிறுத்தி ஒருங்கொன்றி ஆழ்ந்து ஆழ்ந்து
தொடர்இரவின் முழுநிலவின் கடை யாமத்தில்
தூயஒளிப் 'புத்த பதவி' எய்தி வென்றான்.

இருபத்தொன்பது அகவையில் துறவு பூண்டு
இருமூன்று ஆண்டுகளாய் அலைந்து காட்டில்
பொருந்துமொரு தன்வழியில் நோற்று நோற்று,
போதிசத்துப் பதவிகண்டு, சங்கம் தோற்றி
அருநெறிகள் நாலிரண்டும் (எட்டு) வாய்மை நான்கும்
அருளி மும்மணிக் கொள்கை நிறுவி என்றும்

– பேரா.சோதிவாணன்

# தடைகளைத் தகர்த்து
# தஞ்சையில் வெடித்தது உழவர் போர்

● முனைவர் **முத்தமிழ்**



பார்ப்பனப் பனியா மார்வாடிக் கும்பலுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்தியப் பண முதலைகளுக்கும் படியளப்பதற்காகவே ஆட்சிப் பொறுப் பேற்றுள்ள பாசிச வெறிபிடித்த பாஜக அரசு, கொரானா பெருந்தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி 30-க்கும் மேற்பட்ட வெகுமக்களுக்கு எதிரான சட்ட வரைவுகளை நிறைவேற்றிக்கொண்டது.

அவற்றுள் மிகக் கொடுமையானவை, வேளாண் விளைபொருள் வணிக ஊக்குவிப்பு அவசரச் சட்டம் - 2020, உழவர்களுக்கு விலை உறுதி மற்றும் வேளாண் சேவைகள் (உரிமை மற்றும் பாதுகாப்பு) அவசரச் சட்டம் - 2020, அடிப்படைத் தேவைக்கானப் பொருள்கள் (திருத்தம்) அவசரச் சட்டம் - 2020 மற்றும் மின்சாரச் சட்டத் திருத்த வரைவு 2020 ஆகியவை.

2020 சூன் 5ஆம் நாள் திடுமென அறிவித்து, செப்தம்பர் 14-இல் நாடாளுமன்றத்திலும், செப்தம்பர் 20-இல் மாநிலங்கள் அவையிலும் எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி முறையான விவாதங்களுமின்றி குரல் வாக்கெடுப்பின் வழி நிறைவேற்றப்பட்டுவிட்டன இக் கொடுஞ்சட்டங்கள்.

எதிர்க் கட்சியினரும் உழவர் சங்கத் தலைவர்களும் குடியரசுத் தலைவரை நேரில் சந்தித்து முறையிட்டும் அவற்றைச் செவிமடுக்காமல் செப்தம்பர் 27ஆம் நாள் இசைவளித்துத் தன் ஆர்எஸ்எஸ் பற்றை மேலும் கூர்மை யாக்கிக் கொண்டார் குடியரசுத் தலைவர்.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் ஒழுங்குமுறை விற் பனைக் கூடங்கள் போல நாடுமுழுவதும் உள்ள வேளாண் உற்பத்திப் பொருள்கள் மற்றும் கால்நடைச் சந்தை களையும் மண்டிகளையும் இழுத்துமூடிடவும், விவசாயப் பொருள்களுக்கான குறைந்த பட்ச ஆதாரவிலையையும் கொடுக்காமல் பெருநிறுவனங்கள் கொள்ளையடித்துப் போகவும், எளிய மக்கள் வேளாண்மை செய்யும் உரிமை யையும் அவர்கள் நிலத்தின் உரிமையையும் பறித்துப் பெருங்குழும நிறுவனங்களும் பன்னாட்டு இந்தியப் பண முதலைகளும் தாரை வார்த் திடவும் துணைபோகும் இக் கொடுஞ் சட்டங் களை உடனடியாகத் திரும்பப் பெறக்கோரி நாடுமுழுவதும் சூன் 2020 முதலே பல்வேறு வடிவங்களிலான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நவம்பர் 25ஆம் நாள் தில்லி நோக்கிச் செல்வோம் என்ற முழக்கத்துடன் இந்திய ஒன்றியத் தலைநகர் தில்லியில் குவியத் தொடங்கினர், உழவர் பெருமக்கள். 30 நாள் களுக்கும் மேலாக நடைபெறும் இப் போராட் டத்தில், கடுங்குளிரினால் பல்வேறு இன்னல்களுக்கு ஆட்பட்டாலும் நாள்தோறும் ஆயிரக்ககணக்கானோர் குழந்தைகள் முதியவர் என அகவை வேறுபாடின்றிக் குடும்பம் குடும்பமாக உழவர்கள் தில்லிநோக்கிப் படையெடுத்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில், பெரியாரிய உணர்வாளர்கள் கூட் டமைப்பினர் உழுகுடி மக்களின் வீரஞ்செறிந்த இப் போராட்டத்துக்கு முழு ஆதரவு தெரிவித்துப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருவதோடு அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுக்கும் போராட்டங்களிலும் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து வருகின்றனர்.

உயிரைத் துச்சமென மதித்துப் போராடும் உழவர்களின் கோரிக்கைகளிலுள்ள உண்மைகளை மறைத்து, உணவுப் பொருள்களை உற்பத்திசெய்து எல்லோரும் பசியாரிட தம் குருதி சிந்தும் உழவர்பெருமக்களைக் கொச்சைப்படுத்தி, இப்போராட்டங்களைச் சீர்குலைக்க வழக்கம்போல் மதச் சாயமும், எதிர்க் கட்சிகள் அரசியல், அந்நிய நாடுகளின் தூண்டுதல், மாவோயியர்களின் ஊடுருவல் எனப் பல் வேறு கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டு வரும் பாசிச வெறி பிடித்த பாஜக இந்திய அரசின் போக்கு கடுமையான கண்டனத்துக்குரியது.

உழவர் பெருமக்களின், உழவுசார் தொழிலாளர்களின் வாழ்வையே அழிக்கும் இக் கொடுஞ் சட்டங்களை உடனடியாகத் திரும்பப் பெறக் கோரிப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பினர் சார்பில் 09.12.2020 அன்று தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் தொடர்வண்டி மறியல் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடெங்கும் நடைபெற்றுவரும் பல்வேறு காத்திருப்புப் போராட்டங்களிலும் கூட்டமைப்பினர் திரளாகப் பங்கேற்று வலு சேர்த்து வருகின்றனர்.




நாடு முழுவதும் நடைபெறும் எளிய மக்களின் வாழ்வுரிமைக்கான இப் போராட்டங்கள் பாஜக ஆளுகிற, தமிழ்நாட்டைப்போன்று பாஜக-வை அண்டி ஆட்சி நடத்துகிற மாநிலங்களிலெல்லாம் காவல் துறையின் துணையோடு அரச வன்முறைகளால் நசுக்கப்படுகின்றன.

அண்டை மாநிலமான கேரளாவில் இச் சட்டங்களைத் திரும்பப் பெறக் கோரிச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அம் மாநில அரசு. பாஜக சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில், அகில இந்தியப் போராட்டக் குழுவின் தமிழ்நாடு பிரிவு, தில்லியைப்போன்று திசம்பர் 29-இல் தமிழ்நாட்டில் தஞ்சையில் கூடுவோம் என்ற முழக்கத் தோடு பேரணி பொதுக்கூட்டம் அறிவித்தது.

உழவன் மகன் என்று சொல்லிக்கொண்டு தில்லிக்குப் பல்லிளிக்கும் தமிழ்நாட்டு அடிமை அரசு உழவர்களும் பொதுமக்களும் தஞ்சைக்கு வருவதைத் தடுத்துநிறுத்திட எல்லா மாவட்டங்களிலும் தடுப்புநடவடிக்கை எனும் பேரில் மனித உரிமை மீறலை அப்பட்டமாகச் செய்தது.

அடக்குமுறைக்கு அஞ்சாத உழவர்கூட்டம், தடை களைத் தகர்த்தெறிந்து பல்லாயிரக் கணக்கில் திரண்டு தஞ்சையில் எழுப்பிய இடிமுழக்கம் தில்லியையே அதிர வைத்திருக்கும். பெ.உ. கூட்டமைப்பினரும் 500-க்கும் மேற்பட்டோர் தஞ்சை, தங்கமுத்து நாட்டார் திருமணக் கூடத்தில் திரண்டு அங்கிருந்து, “மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறு!”, “மின்சாரத் திருத்த வரைவைத் திரும்பப் பெறு!”, “மாநில உரிமைகளைப் பறிக்காதே!” எனும் முழக்கங்களை விண்ணதிர எழுப்பிப் பதாகைகள் ஏந்திப் பேரணியாகச் சென்று திருவள்ளுவர் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பங்கேற்றனர். கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் உரையாற்றியபோது இந்தியை எதிர்க்கும் தமிழர்களுக்கு உழவர் பெருமக்கள் முழங்கும் ‘டெல்லி சலோ’ எனும் முழக்கம் தேனாய் இனிக்கிறது என்று மொழி இன வேறுபாடு கடந்து உழவர் போராட்டத்தை ஆதரிக்க வேண்டிய தேவையை உணர்த்தினார். பெ.உ.கூட்டமைப்பு உழவர்கள் மற்றும் எளிய மக்களின் உரிமைகளைக் காக்க எப்போதும் முகங்கொடுக்கும் என்றும் இச் சட்டங்களைத் திரும்பப் பெறும் வரை உழவர்களோடு தோள்நின்று அரண் சேர்ப்போம் என்றும் உறுதியளித்தார். பெ.உ. கூட்டமைப்பு உறுப்பாண்மை இயக்கங்களின் முன்னணித் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களின் பொறுப்பாளர்கள் திரளான தோழர்களோடு பங்கேற்றனர். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார் பிலும் தோழர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

**நாற்பது நாள்களுக்கும் மேலாகத் தொடரும் தில்லிப் போராட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட உழவர் பெருமக்கள் தம் இன்னுயிரை ஈந்த பிறகும் மமதையோடு இருக்கிறது மோடி தலைமையிலான பாஜக அரசு.**

**எவ்வளவு துயர் வரினும், எத்துனை உயிரைப் பலி கொடுத்தேனும் இக் கொடுஞ் சட்டங்களைத் திரும்பப் பெறாமல் வீடு திரும்புவதில்லை என்ற உறுதியோடு தில்லியில் குவிந்திருக்கின்றனர் வீர மறவர்களான உழவர் பெருமக்கள். அந் நெஞ்சுறுதி மிக்க போராளிகளின் கரங்களைப் பற்றி அரண் சேர்ப்போம்.**

**மேலும், ஆர்எஸ்எஸ் - பாஜக - இந்துத்துவக் கும்பலை வேரறுக்காமல் இதுபோன்ற போராட்டங்களுக்கு முடி வில்லை என்ற புரிதலோடு போராடுவோம், வெற்றிபெறு வோம்.** ●

## பகுத்தறிவாளர்களே!

தோழர்களே! நாம் உலகம் ஒன்றாகவேண்டும் என்று நினைக்கின்றோம். நம் இயக்கம் உலக இயக்கம். உலக இயக்கம் என்றதும் மனிதன் மலைப்பான்; இவர்கள் இங்கிருந்துகொண்டுதானே பேசுகின்றார்கள் என்று. முற்காலத்தில் மனிதனுக்கு 25 மைலுக்கு அப்பால் உள்ளதே மலைப்பாக இருக்கும்; அன்றைக்கு உலகத்தினை உணர அவனுக்குச் சாதனங்கள் இல்லை. அது மட்டுமல்ல; தமது நாட்டைப் பற்றிக்கூட உணர வசதி இல்லை. நல்ல ரோடு கிடையாது, போக்குவரத்து, வாகன வசதி கிடையாது. எனவே, அவனுக்கு அண்டை அயல் நாடுகள் தெரியாது.

தமிழ் என்றும், தெலுங்கும் என்றும், மலையாளம் என்றும், கன்னடம் என்றும், மராட்டி, குஜராத்தி என்றும் பற்பல மொழிகள் ஏற்பட்டதற்குக் காரணமே - ஒரு பகுத்திக்கு ஒரு பகுதி தொடர்பில்லாத காரணத்தினால் ஆங்காங்குள்ளவர்கள் ஆங்காங்கு பேசியது ஒவ்வொரு மொழியாக ஆகிவிட்டது. நமது நாட்டில் மட்டும் இப்படியல்ல. மேல்நாடுகளில் இப்படித்தான். ஸ்பெயின், போத்துகீஸ், பிரெஞ்சு என்றும்; ஸ்வீடிஷ், செருமனி, இத்தாலி, கிரீஸ் என்றும் ஏராளமான மொழிகள் இருக்கின்றன என்றால் - முற்காலத்தில் ஒரு பகுதி மக்களுக்கும், மற்றொரு பகுதி மக்களுக்கும் தொடர்பில்லாத காரணத்தினால்தான் ஆகும்.

இன்று அப்படியல்லவே! அமெரிக்காவானது 10,000 மைல்கள் என்றால் 1லு நாளில் அங்கு போய்விட லாமே! நமக்கும் இரஷியாவுக்கும் 8 மணிநேரப் பயணம்தானே! போக 8 மணி; அங்கு காரியம் பார்க்க 8 மணி; திரும்பி வர 8 மணி நேரம் என்று வைத்துக் கொண்டால் - 24 மணி நேரத்தில் இரஷியாவுக்குப் போய் வந்துவிடலாமே! இப்படியாக உலகம் விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பக்கத்தில் வந்துகொண்டு இருக்கின்றது.

**- தந்தை பெரியார்**

# கீழ்வெண்மணி படுகொலையின்போது
# பெரியார் அமைதி காத்தாரா?

- தோழர் தியாகு
முகநூல் பதிவு

"**கீழ்வெண்மணி படுகொலையின்போது பெரியார் ஆதிக்கச் சாதி மக்களுக்கு ஆதரவாக அமைதி காத்தாரா?**

இதற்கான பதிலைத் தெரிந்து கொள்ளும் முன் முதுகுளத்தூர் கலவரத்தின் போது பெரியாரின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும். கலவரச் சூழல் குறைய முத்துராமலிங்கம் கைது செய்யப்பட வேண்டும் என வெளிப்படையாக ஆதிக்கச் சாதியினரை எதிர்த்து பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு ஆதரவு அளித்தார் பெரியார்.

கீழ்வெண்மணியில் 'திராவிட விவசாயத் தொழிற் சங்கம்' என்ற அமைப்பு திராவிடர் கழகத் தோழர்களால் நடத்தப்பட்டு வந்தது. சாணிப்பால், சவுக்கால் அடித்தது போன்ற வன்கொடுமைகளை திராவிடர் கழகம் எதிர்த்தது. கம்யூனிஸ்ட்டுகளும் எதிர்த்தனர். கூலி, குத்தகை, அவர்களின் வாழ்க்கைத் தரம், அவர்களுக்கு கல்வி போதிப்பது என அனைத்துக் களங்களிலும் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் இயங்கியது. அவர்களுக்கானக் கொள்கைகளை விளக்கி விடுதலை சார்பாக சிறிய புத்தகமும் வெளியிடப்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியால் சாதிக்க முடியாததை, அவர்கள் இவ்வளவு காலம் போராடியும் செய்ய முடியாததை இராஜாஜி ஆட்சிக் காலத்தில் பெரியார் செய்தார். அது 'தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்'. அன்று பண்ணையாளுக்கு எந்த பாதுகாப்பும் கிடையாது. ஒரு நாள் காலையில் வேலைக்கு போனால் மறுநாள் வேலைக்கு வேண்டாம் என்று சொல்லி விடுவார்கள். வேலைக்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. அப்படி வேலை திடீரென மறுக்கப்பட்டால் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று அந்த சட்டம் உறுதி செய்தது. அது ஒரு பெரிய பாதுகாப்பாக பண்ணையாளுக்கு வந்தது. அது பெரியாரின் கோரிக்கையால், திராவிட விவசாய தொழிலாளர் சங்கத்தின் போராட்டத்தால் கிடைத்தது.

திசம்பர் 25, 1968 இரவு கீழ்வெண்மணியில் கலவரம் நடந்தது 44 பேர் உயிரோடுக் கொளுத்தப்பட்ட போது பெரியார் உடல் நலம் மோசமாகி சென்னை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை செய்துவந்தாரென்பது டிசம்பர் 27, 29 தேதிகளிட்ட விடுதலை நாளேட்டின் பக்கங்களில் ஆசிரியர்"கி. வீரமணி எழுதிய குறிப்புகளின் வழியாக அறியப்படுகிறது. எனவே உடனடியாக பெரியார் எந்த அறிக்கையும் கொடுக்கவில்லை. ஆனால் பிறகு கீழ்வெண்மணியைத் தடுப்பது எப்படி? என்றத் தலைப்பில் இரண்டு அறிக்கைகளை எழுதினார். 12.1.1969 அன்று செம்பனார் கோவிலில் நடந்த கூட்டத்தில் கீழ்வெண்மணி கலவரம் பற்றி பேசுகிறார். பொதுவாக கூலி உயர்வுப் போராட்டங்களை பெரியார் ஆதரிக்கவில்லை. தொழிலாளர்கள் பங்குதாரர்கள் ஆவதுதான் முக்கியம் என்பதே பெரியாரின் நிலைப்பாடு.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது பாடுபடும் மக்கள் நிலை தாழ்ந்திருக்கவும் பாடுபடாத மக்கள் நிலை உயர்ந்திருக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் கூடாது என்பதுதான் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் முக்கியத்துவமாய் இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், ஏதோ 2 அணா 4 அணா கூலி உயர்த்தப்படுவதற்காகப் போராடுவதென்பது பயனற்றதேயாகும். ஏனெனில் நமது கிளர்ச்சியில் 2 அணா கூலி உயர்த்தித் தருவானேயானால், தொழிலாளிகளால் செய்யப்படும் சாமான்களின் பேரில் முதலாளிகள் ஒன்று சேர்ந்து நாலணா விலை அதிகப்படுத்திவிடுவார்கள்.

அந்த உயர்ந்த விலையைக் கொடுத்துச் சாமான் வாங்க வேண்டியவர்கள் தொழிலாளிகளேயாவார்கள். ஆகவே, முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வலது கையில் கூலி அதிகம் கொடுத்து, இடது கையில் அதைத் தட்டிப் பிடுங்கிக் கொள்வார்கள். முதலாளிகளுடன் கூலித்தகராறு என்பது முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் உள்ள புல்லுருவிக் கூட்டமான தரகர்களுடைய சூழ்ச்சியாகும் (குடிஅரசு 01.10.1933).

நிலங்கள் அனைவருக்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும்; விவசாயத்தில் ஈடுபட்ட கூலியாட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒரு பங்கு இருக்கும்படிச் செய்ய வேண்டும் - (பகுத்தறிவு - 2.12.1934).

முதலாளிக்கு ஏற்படும் இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கும் நிர்வாகத்தில் உரிமையும் வேண்டும். 1944-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டுத் தீர்மானம். இந்த அடிப்படையிலேதான் போராட்டத்தை முன்னிருந்து நடத்திய கம்யூனிஸ்ட் கட்சியை விமர்சித்தார். இருந்தாலும் திராவிடர் கழகத்தினரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் கீழ்வெண்மணி மக்களுடன் தொடர்ந்து இயங்கி வந்தனர். இது தொடர்பான சட்ட நடவடிக்கைக்குப் போராடி வந்தனர். கலவரத்தைப் பற்றி விசாரிக்க தனி நபர் கமிஷன் போட்டிருந்தார் அன்றைய முதல்வர் அண்ணா. அதற்கு கணபதியா பிள்ளை கமிஷன் என்று பெயர். திராவிட விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் நிறைய தோழர்கள் சாட்சியம் சொன்னார்கள். கீழ்வெண்மணியை சார்ந்த முனியன் என்பவர் கீவளூர் காவல்நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்:327/68ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கோபால கிருஷ்ண நாயுடு உட்பட 106-பேரை காவல் துறை கைது செய்தது. கைதானவர்களில் அதிகம் பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். முக்கியக் குற்றவாளியான கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு 1970-இல் நாகப்பட்டினம் அமர்வு நீதிபதி குப்பண்ணா 10-ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தார்.

இத்தீர்ப்புக்கு எதிராக கோபால கிருஷ்ண நாயுடு சென்னை உயர்நீதிமன்றத்தில் தான் நிரபராதி என்று மேல் முறையீடு செய்தார். 4-வருடங்கள் 3-மாதங்களாக விசாரணையில் இருந்த வழக்குக்கு 1975-ஏப்ரல் 6-ஆம் தேதி தீர்ப்பு சொல்லப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த மகராஜன் கோபால கிருஷ்ண நாயுடு மீது எந்த குற்றமும் நிரூபிக்கப்படவில்லை என்று கூறி விடுதலை செய்வதாக தீர்ப்பளித்தார்.

கவனிக்க : பெரியார் 1973 டிசம்பரில் இறந்துவிட்டார். அவருக்கு கோபால கிருஷ்ண நாயுடு கீழ் நீதி மன்றத்தில் தண்டனை பெற்றதும், மேல் முறையீடு செய்ததும், ஜாமீனில் வெளி வந்ததும் மட்டுமே தெரியும். மேல் முறையீட்டு விடுதலை அவரின் மறைவுக்குப் பின். எனவே கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு அவர் ஆதரவளித்ததாகச் சொல்வது எங்குமே பொருந்தாது. இன்னொரு முக்கிய விசயம். ஜாமீனில் வெளிவந்த கோபால கிருஷ்ணன் கீவளூர் வந்திருந்த பெரியாரை சந்திக்க முயன்ற போது பெரியார் என் கிட்ட என்ன சொல்ல நினைக்கிறாரோ அத கோர்ட்ல சொல்லச் சொல்லு. அவரையெல்லாம் பார்க்கவே பிடிக்கலை. அவரை கண்ணாலே பார்க்க விருப்பமில்லை. போ. போ. போகச் சொல்லு எனக் கூறி சந்திக்க மறுத்து விட்டார். இதை கணபதியா கமிசனில் சாட்சியம் அளித்த நாகை எஸ்.எஸ்.பாட்சா பதிவு செய்துள்ளார்.“கோபால கிருஷ்ண நாயுடு விடுதலை ஆன சில ஆண்டுகளுக்குப் பிறகு தியாகிகள் நினைவிடத்திற்கு அருகில் வெட்டிக் கொல்லப்பட்டார். அந்தக் கொலைத் தொடர்பாக காவல் துறை 12 பேரைக் கைது செய்தது. அதில் 9 பேர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அதில் கைதான காவலாக்குடி மதி’ இன்னும் உயிரோடு இருக்கிறார். குடந்தை ஆ.பி.எஸ். ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால்தான் வழக்கில் கைது செய்யப்பட்ட திராவிடர் கழக இளைஞர்களுக்காக நாகப்பட்டிணம் நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதி மன்றத்திலும் வழக்குகளை நடத்தி அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

ஆக, கலவரத்திற்கு முன்பும், பின்பும் திராவிடர் கழகமும், பெரியாரும் ஒரு போதும் ஆதிக்கச் சாதியினர்க்கு ஆதரவாக இல்லை!

## மருதாம்பாள் மறைவு



அரியலூர் மாவட்டம், அரியலூர் கவரைத்தெரு காலஞ்சென்ற க. அண்ணாமலை அவர்களின் மனைவியும், மகன்கள் பெரியசாமி, கண்ணையன் (லேட்), சின்னையன், சுந்தரம், கிட்டு என்ற வாசு, மகள்கள் அஞ்சலை, அமிர்தம், ஞானாம்பாள், நவமணி என்ற பூங்கொடி, விஜயகுமாரி ஆகியோரின் தாயாருமான திருமதி. மருதாம்பாள் (வயது 92) 11.11.2020 புதன்கிழமை அன்று காலை 06.30 மணியளவில் சென்னையில் இயற்கை எய்தினார். 12.11.2020 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் சென்னையில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது நினைவாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.1000/- அளிக்கப்பட்டது.

**செய்தி : அ. பெரியசாமி**


தமிழே கல்வி மொழி ! தமிழே நீதி மொழி ! தமிழே நிர்வாக மொழி !

**இந்திய அரசே ! இந்தி - சமற்கிருத்தைத் திணிக்காதே !**

**தமிழக அரசே ! தமிழ் வழியில் பயின்றவர்களுக்கே தமிழ்நாட்டில் வேலைக் கொடு !**

**ஈகியர் நடராசன் - தாளமுத்து நினைவிடத்தில் மொழிப்போர் வரலாற்று நினைவு மணி மண்டபம் அமைத்திடு**






**மொழிப்போர் ஈகியர் நாள் வீர வணக்கப் பேரணி**

நாள் : திருவள்ளுவர் ஆண்டு 2052 சுறவம் (தை) 12 (**25.01.2021**) திங்கள் காலை 10.00 மணி


பேரணி புறப்படும் இடம் : அரசு அச்சகம் எதிரில், தங்ககாலை, வள்ளலார் நகர், சென்னை.

முடியும் இடம் : மொழிப்போர் ஈகியர் நடராசன் - தாளமுத்து மருத்துவர். தர்மாம்பாள் நினைவிடம்,

தலைமை : புலவர். **இரத்தினவேலன்**

ஒருங்கிணைப்பாளர், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

*அனைவரையும் வருக*




**தமிழ் உரிமைக் கூட்டமைப்பு**

9840167599, 944526969610, 9444321902

# பகுத்தறிவுச் சுடர்
# எஸ். ஆர். இராதா

● இராமியா

முன்னாள் அமைச்சர், முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எம்.ஜி.ஆரின் அணுக்கமான தோழர் எனப் பல அடையாளங்கள் இருந்தும், தன்னைப் பெரியாரின் தொண்டனாகவே அடையாளப்படுத்திக் கொண்ட பகுத்தறிவுச் சுடர் எஸ்.ஆர். இராதா 8.12.2020 அன்று தனது 87-ஆவது வயதில் காலமானார்.

அமாவாசையன்று பிறந்தால் திருடன் ஆவான் என்று ஒரு நம்பிக்கை உண்டு. ஆனால் எஸ்.ஆர். இராதா 9.8.1934 ஆடி அமாவாசை நாளன்று பிறந்தார். தம் வாழ்நாள் முழுவதும் நேர்மையாகவே வாழ்ந்தார்.

அவருடைய எளிமையான தோற்றத்தைப் பார்க்கும் யாரும் அவரை ஏழையாகவே நினைப்பர். ஆனால் அவருடைய பாட்டனார் காலம் முதல் அவருடைய குடும்பம் பெரும் பணக்காரக் குடும்பம் ஆகும். அரசியல் காரணமாகத் தன்னிடம் உள்ள பணத்தை இழந்து இருக்கிறாரேயொழிய அரசியலிலிருந்து ஒரு சல்லிக் காசுகூட அவர் சம்பாதிக்கவில்லை. அவர் நடத்திக் கொண்டிருந்த அச்சகத்தை அவரது அரசியல் எதிரிகள் அடித்து நொறுக்கிய பொழுது, அதற்கு எதிராக நடந்த கண்டனக் கூட்டத்தில் எஸ்.ஆர். இராதாவிற்கு நிதி உதவி அளிக்குமாறு எம்.ஜி.ஆர். கூடியிருந்த மக்களிடம் கேட்டுக் கொண்டார். உடனே ரூ.50,000/- சேர்ந்தது. அதை அப்படியே கொடுத்த பொழுது தனக்கு ஏற்பட்ட பாதிப்பு ரூ.13,000/- அளவில்தான் என்று கூறி, அதை மட்டும் பெற்றுக்கொண்டு மிகுதியைக் கட்சிக்கே அளித்துவிட்டார். அதுமட்டுமல்ல, தேர்தல் செலவுக் காகத் தன்னிடம் கொடுக்கும் பணத்தில் செலவுகள் போக மிகுதியைக் கட்சி அலுவலகத்தில் திருப்பி அளித்து விடுவதும் அவர் பழக்கம்.

தனது 13-ஆவது வயதில் பகுத்தறிவுச் சிந்தனை யின்பால் கவரப்பட்ட அவர், தன் சுற்றத்தார்களின் எதிர்ப்பையும் மீறி, சொந்த ஊரான கும்பகோணத்தில் பெரியாரை அழைத்துப் பொதுக் கூட்டத்தை நடத்தினார். பெரியாரைவிட்டுப் பிரிந்து வந்தபின் அவரை வைத்துப் பொதுக் கூட்டம் நடத்துவதா என்று தி.மு.க.வினர் பலர் கூறியபொழுது அண்ணா, "பெரியாரை விட்டுப் பிரிந்து வரவில்லை; பெரியார்தான் நம் கட்சிக்கும் தலைவர். அதனாலேயே நான் பொதுச் செயலாளர் பதவியில் இருக்கிறேன்; நம் கட்சியின் நிலைப்பாட்டை எஸ்.ஆர். இராதாதான் சரியாகப் புரிந்துகொண்டு உள்ளார்" என்று விளக்கம் கூறி எஸ்.ஆர். இராதாவைப் பாராட்டினார்.

தி.மு.க. உடைந்து அதி.மு.க. தொடங்கப்பட்ட பொழுது, எஸ்.ஆர். இராதா தான் பெரியாருடைய கொள்கையில்



தான் தீவிரமாக இருப்பதாகவும், எம்.ஜி.ஆர். பெரி யாரிடமிருந்து விலகினால், தான் அவரை விட்டு விலக நேரிடும் என்பதையும் சொல்லி விட்டுத்தான் அக்கட்சி யில் சேர்ந்தார்.

எம்.ஜி.ஆரிடம் பதவிக்காக, உதவிக்காகப் பலரும் வேண்டி நின்ற நிலையில், எம்.ஜி.ஆர். பதவியை ஏற்றுக் கொள்; உதவியை ஏற்றுக்கொள் என்று வேண்டிக் கொள்ளவைத்த தன்மான வீரர் தான் எஸ்.ஆர். இராதா. பதவியில் இருந்த காலத்தில் அவர் எடுத்த முடிவுகளில் எம்.ஜி.ஆர். தலையிடவே இல்லை என்பது எஸ்.ஆர். இராதாவின் திறமைக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டு.

அவர் சார்ந்த சௌராஷ்ட்ர சமூகத்தின் மற்ற அரசியல் வாதிகள் தேசிய நீரோட்டம் என்கின்ற மாயையில் சமூகத்திற்குத் தேவையான தொண்டுகளைச் செய்யத் தயங்கி நின்றனர். ஆனால் எஸ்.ஆர். இராதா மற்ற வகுப்பு மக்களுக்கு இடையூறு இல்லை என்பதை உறுதிசெய்து கொண்டு தன் சமூக மக்களுக்குப் பல நன்மைகளைத் துணிந்து செய்தார். அது மட்டும் அல்லாமல் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான நியாயமான கோரிக்கை களைத் தானே முன்னின்று நிறைவேற்றி வைத்தார்.

அனைத்து தரப்பு மக்களின் நன் மதிப்பையும் பெற்ற எஸ்.ஆர். இராதாவின் மறைவு தமிழ்நாட்டு மக்களுக்கும், பெரியாரிய உணர்வாளர்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். வாழ்க எஸ்.ஆர். இராதாவின் புகழ். ●

# சிங்காரவேலரின் சிறு தவறு!

● **குத்தூசி குருசாமி**

விடுதலை, 11-2-52

இன்று சிங்காரவேலர் நினைவு நாள், சரியாக ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் மறைந்தார், தமிழ் நாட்டின் முதலாவது கம்யூனிஸ்ட்!

தமிழர்களில் அன்று ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு (நான் உள்பட) கம்யூனிச அரிச்சுவடியை சொல்லிக் கொடுத்தவர் இவர்தான்!

தமிழ் நாட்டு கம்யூனிஸ்ட்கள் இவரை மறந்து விட்டார்களே என்று நான் அடிக்கடி வருந்துவதுண்டு, பழைய நிகழ்ச்சி யொன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மெமோரியல் மண்டபத்தில் சோவியத் யூனியன் நண்பர்கள் சங்கம் என்ற ஒரு கூட்டத்தார் சோவியத் கலைக்காட்சியொன்றை நடத்தினார்கள். அந்த சோவியத் நண்பர்கள் குழுவில் இந்து ஆசிரியர் போன்றவர்களும் இருந்தார்கள்!

அந்தக் காட்சியை நீண்ட நேரம் பார்த்துப் பல புள்ளிவிவரங்களையும் குறித்துக் கொண்டோம். உள்ளே நுழைந்தவுடன் பாரதியாரின் பெரிய படமிருந்தது. எங்கு திரும்பினாலும் பாரதியாரின் வாக்கியங்களே தென்பட்டன! பாரதி கலைக் காட்சி என்றே அதைக் கூறவேண்டும்! காட்சி முழுவதையும் பார்த்துவிட்டு வெளியே வந்தோம், நானும் என் மனைவியாரும்!

காட்சியைப் பற்றிய கருத்தை எழுதுவதற்காக வெளி வாயிலில் ஒரு நோட் புக் வைக்கப்பட்டிருந்தது. சோவியத் கொள்கைக்கு நேர்மாறான கருத்துக்களைக் கொண்ட பாரதியாருக்கே இங்கு முழு முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கிறது. ஆனால் தென்னாட்டில் பொது உடைமை குருவான ம. சிங்காரவேலரின் படமோ அவரது பொன் மொழியோ ஒரு இடத்திலும் காணோம்! இங்கும் அக்கிர காரத்துக்குதான் ஆதிக்கமா? - என்று அந்த நோட்டில் எழுதி, திரு. குஞ்சிதம் அம்மையாரும் நானும் கையெழுத் திட்டு வந்தோம். அன்று எங்களைப் போன்று நினைத்த வர்கள் பல்லாயிரம் பேர் இருந்திருக்கலாம்!

போகட்டும்! இப்போதாவது சிங்கார வேலர் என்ற ஒரு ஆசாமி வாழ்ந்தார் என்ற நினைவு நமக்கு வந்ததே அதுவே போதும்! சிங்காரவேலரைப் பற்றி நினைக்கும் போது இரண்டொரு சங்கதிகள் என் நினைவுக்கு வரு கின்றன. பேச்சில் அவர் ஒரு முரடர்! ஆனால் இயற் கையில் மிக மிக நல்லவர். யாராவது அவரைக் கும் பிட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தால், இது என்ன கூழைக் கும்பிடு? பூர்ஷ்வா மெண்டாலிட்டி! என்று திடீரென்று பாய்வார்!

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயம் தோழர் ஜீவானந்தமும் மற்றொரு தோழரும் அவரைக் காணச்சென்றிருந்தார்கள். அப்போது அவர் கடற்கரைக் குப்பத்தில் லேடி வெலிங்டன் பள்ளிக்கு அருகில் வசித்துக் கொண்டிருந்தார்! ஜீவானந்தத்தின் நண்பர் ஒரு புஸ்தகம் வைத்துக் கொண்டிருந்தார்! புஸ்தகம் என்றால் சிங்காரவேலருக்கு ரொம்பப் பைத்தியம்! இடைவிடாது படிப்பார்! ஏராளமாக படிப்பார்! அவரது நூல் நிலை யத்தில் சுமார் இருபதாயிரம் நூல்களுக்கு மேல் இருந்தன. இவைகளில் ஆயிரமாவது கம்யூனிசம் பற்றிய நூல்கள்!

அது என்ன புஸ்தகம்? என்று கேட்டதும் அந்த நண்பர், பகவத் கீதை என்று பதில் சொன்னார். நெருப் பிலே போடு! பகவத்கீதையாம்! ஏனப்பா, ஜீவானந்தம், யார் இந்த ஆசாமி? இவனை ஏன் இங்கே அழைத்து வந்தாய்?- என்று உடனே கேட்டுவிட்டார்!

அக்காலத்தில் சிங்காரவேலரிடம் நெருங்கிப் பழகிய வர்களில் நானும் ஒருவன்! அடிக்கடி அவர் வீட்டுக்குச் செல்வோம், அவரும் எங்கள் வீட்டிற்கு வருவார், கண்டவுடனே முதலில் கேட்கும் கேள்வி என்ன தெரியுமா?

நேற்று எத்தனை புஸ்தகம் படித்தாய்? -என்பது தான்! சதா படிப்பு! படிப்பு!! படிப்பு!!! படிக்காமல் சோம்பித் திரிகிறவர்களை அவர் மனிதரென்றே மதிப்பதில்லை! அவரைப் பற்றிய கதைகள் எவ்வளவோ கூறலாம்! பொதுக்கூட்டத்தில் அவருக்கு மாலை போட்டாலோ, அல்லது அவர் பேசும்போது கை தட்டினாலோ ஒரே கோபம் வந்துவிடும்! இது பூர்ஷ்வா மெண்டாலிட்டி என அறிக! - என்று பெருங் கூச்சல் போடுவார்!

இந்தா, குருசாமி! காரில் போகிற போது ஜாக்கிர தையாகப் போ! அதிக வேகத்தில் ஓட்டச் சொல்லாதே! மீறி ஓட்டினால் டிரைவர் தலையில் குட்டு! நம் உயிர்கள் சாதாரணமல்ல! சமதர்மிகள் உயிரப்பா! விலை மதிக்க முடியாத உயிரப்பா! - என்று அடிக்கடி சொல்வார்!

வான நூல் முதல் நில நூல் வரையில் - தத்துவ நூல் முதல் தாவர நூல் வரையில்- பொதுவுடைமை நூல் முதல் - உடற்கூற்று நூல் வரையில் - அவர் படித்து அறிந்திருந்த துறைகள் ஒன்றல்ல, இரண்டல்ல! பலப் பல உண்டு! முதிர்ந்த மூளை! நல்ல அனுபவம்! ஆனாலும் ஒரு சிறு தவறு செய்து விட்டார்! அவர் அக்கிரகாரத்தில் பிறக்கவில்லை! பிறந்திருந்தால் அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழும்பியிருக்கும்! அவரை அக்கிரகாரமும் (முதலாளி உலகமும் கூட) தலைமீது வைத்துக் கொண்டாடும்!!

ஆனந்த விகடன்

# 2020 டாப் 10 மனிதர்கள்

**பேராசிரியர் த.செயராமன், தலைமை ஒருங்கிணைப் பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு அவர்களுக்கு,**

## "விகடன் டாப் 10 மனிதர்கள்" நம்பிக்கை விருதுகள் 2020-ஐ ஆனந்தவிகடன் வழங்குகிறது

சூழலைப் போற்றும் சூரர்! - பேராசிரியர் ஜெயராமன்



எரிவாயு வெம்மையிலிருந்து காவிரிப்படுகையின் பச்சையத்தை மீட்கக் களமாடும் மண்ணின் மைந்தர். மீத்தேன் திட்டத்தின் பாதிப்புகளை எளிய மொழியில் எழுதியும் பேசியும் இவர் எரிவாயுத் துளைகளுக்கெதிராக ஜெயராமன் கட்டியெழுப்பிய போராட்டக்களங்களே காவிரிப்படுகையைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கும் நெருக்கடியை அரசுக்கு உருவாக்கின. பணி ஓய்வுக்குப் பிறகான காலங்களைச் சிறையிலும் போராட்டக்களத்திலும் கழித்துவரும் இந்தப் பேராசிரியர், மக்களுக்கான வரலாறு, புவியியல், அறிவியலை ஜோதியாக ஏந்திச்சென்று கிராமந்தோறும் அறிவு வெளிச்சம் ஏற்றுகிறார்.

சிந்தனையான் ஆசியர் குழுவின் சார்பில் வாழ்த்துகிறோம்.

# பெரியார் பெருந்தொண்டர் பூலாம்பாடி கு. வரதராசன் 80-ஆம் ஆண்டு தொடக்கம்



பெரியார் தொண்டர் பூலாம்பாடி கு.வரதராசன் தமது 80-ஆவது அகவை 10.12.2020-இல் தொடங்கியது.

கு.வரதராசன்-சின்னப் பெண் திருமணம் 27.5.1963-இல் பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவர்களது முதல் குழந்தைக் குத் தந்தை பெரியார் அவர்கள் திருச்சி புத்தூர் பெரியார் மாளிகையில் 15.09.1967-இல் ‘அறிவுக்கண்ணு’ எனப் பெயரிட்டார்.

கு. வரதராசனின் மணிவிழாவும், மணி விழா மலர் வெளியீடும் அய்யா வே. ஆனைமுத்து தலைமையில் பூலாம்பாடியில் நடைபெற்றது.

அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் வழிகாட்டுதலின்படி-தந்தை பெரியாரின் சொற்பொழிவுக் கூட்டங்களைத் தாமே முன்னின்று சில இடங்களில் நடத்தியுள்ளார்.

1926 முதல் 1973 செப்டம்பர் முடிய தந்தை பெரியார் பெரம்பலூர் மாவட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய சிற்றூர், பேரூர், நகரம் என 27 ஊர்களிலும், 55 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியுள்ளார். இவற்றை ‘குடியரசு’, ‘விடுதலை’ இவற்றில் உள்ள செய்தி ஆவணங்களின்படி தொகுத்துள்ளார். ‘பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்’ என்ற இவரது தொகுப்பு நூல் 10,03,2019 அன்று பெரம்பலூர் சின்னமணி-இராசேசுவரி திருமண மண்டபத்தில் பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களால் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டிலே ஏழு மாவட்டங்களை முன்னிலைப் படுத்தித் தந்தை பெரியாரின் சொற்பொழிவுகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் ஆவார்.

கு. வரதராசனின் 80-ஆவது ஆண்டு தொடக்க நாளன்று இவரது மக்கள் சந்திரசேகரன்-இராகமஞ்சரி, மகள் அறிவுக்கண்ணு-பாஸ்கர், அன்புச் செல்வி-சந்துரு மற்றும் பெயரன் பெயர்த்திகள் கனிமொழி, கௌதமி, அருண், மகேசுவரி, சௌந்தர்யா, கவிமாறன் ஆகியோர் பெற்றோர்களை வாழ்த்தினர்.

கொள்கைக் குடும்பத்தினர் ‘சிந்தனையாளன்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கி மகிழ்ந்தனர்.

- செய்தி : **ந. கருணாகரன்**

# திராவிடர் கழகப் பெயர் மாற்றம் ஒரே நாளில் நிகழ்ந்தா ?

● வாலாசா வல்லவன்

தென்னிந்தியர் நலவுரிமைச் சங்கம் என்ற ஜஸ்டிஸ் கட்சிக்குத் திராவிடர் கழகம் என்ற பெயர் மாற்றம் ஒரே நாளில் எடுக்கப்பட்ட முடிவல்ல. ஓராண்டு காலமாகப் பல்வேறு மாநாடுகளில் விவாதிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

26-4-43 நண்பகல் 2 மணிக்குச் சேலம் தேவங்கர் பள்ளிக் கூடத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டம் பெரியார் தலைமையில் கூடியது. அக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் – 2**

“ஜஸ்டிஸ் கட்சிக்கு (S.I.L.F) தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் என்றிருக்கும் பெயரைத் தென்னிந்திய திராவிடர் கழகம் என்றும், ஆங்கிலத்தில் South Indian Dravidan Fedration என்றும் பெயர் திருத்தப்பட வேண்டும்.

**தீர்மானம் – 4**

இத்தீர்மானங்களைச் சேலத்தில் நடக்க போகும் கட்சி மாநாட்டில் உறுதிப்படுத்தி அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

(குடி அரசு 4-12-43 பக்கம் 5)

ஜஸ்டிஸ் கட்சிக்கு அமைந்த தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயர் இனித் தென் இந்திய திராவிடர் கழகம் என்பதாக அழைக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்தத் தீர்மானமும் ஒரு விதத்தில் திருவாரூர் மகாநாட்டில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்றே சொல்லலாம்.

(குடி அரசு 4-12-43 பக்கம் 11)

கோவையில் 19-11-43 அன்று அறிஞர் அண்ணாவின் சந்திரோதயம் நாடகத்திற்குப் பெரியார் தலைமைத் தாங்கினார். அப்போது பெரியாருக்கு வாசித்தளித்த வரவேற்புத் தாளில் கோவை மாவட்ட திராவிட கழகத்தால் என்று அச்சிட்டிருந்தனர்.

(குடி அரசு 18-12-43 பக்கம் 4)

சேலம் நகரில் செவ்வாய்பேட்டை திராவிடர் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழா 16-1-44 முற்பகல் 11 மணிக்குத் தொடங்கியது. தொடக்கத்தில் சேலம் தோழர்கள் பெரியார் ஈ. வெ. ரா., அண்ணாதுரை, என்.அர்ச்தனன், ஐ. ச. கண்ணப்பர் ஆகியவர்களை இரட்டைக் குதிரை கோச்சு வண்டியில் அமரவைத்து ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

(குடி அரசு 22-1-44 பக்கம் 6)

1943இலேயே இங்குத் திராவிடர் கழகம் தொடங்கப் பட்டு முதலாமாண்டு விழாவும் நடைபெற்றுள்ளது. புவனகிரி திராவிடர் கழக ஆரம்ப விழா 6-2-44 காலை 10.30 மணிக்கு சி. பி. சின்னராசு தலைமையில் நடைபெற்றது. பெரியார் அவர்களுக்குத் திராவிடர் கழகத்தாரால் வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

(குடி அரசு 12-2-44 பக்கம் 5)

சென்னையில் நீதி கட்சியின் சென்னை மாவட்ட மாநாடு 13-2-44 அன்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களில் முதலாவது தீர்மானம் கட்சியின் பெயர் மாற்றத் தீர்மானமாகும்.

1. தென் இந்தியர் நல உரிமைச் சங்கம் என்பதைச் சென்னை மாகாண ‘திராவிடர் கட்சி’ என்று மாற்றுமாறு சேலத்தில் நடைபெறப்போகும் மாகாண மாநாட்டிற்கு இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

(குடி அரசு 26-2-44 பக்கம் 14)

திருச்சி மாவட்ட நீதிக்கட்சி 15ஆவது மாநாட்டில் 20-2-44 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று கட்சியின் பெயர் மாற்றத் தீர்மானம் பற்றியது ஆகும். அண்மையில் சேலத்தில் நடக்கவிருக்கும் நமது மாகாண மாநாட்டில் நமது கட்சியின் பெயரைத் “திராவிடர் கழகம்” என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இம்மாநாடு சிபாரிசு செய்கிறது. (குடி அரசு 4-3-44 பக்கம் 4)

நாகையில் திராவிடர் கழகம் திறப்பு விழா 9-3-44 முற்பகல் 11.45 மணிக்கு நடைபெற்றது. நாகை திராவிடர் கழகத்தாரால் பெரியாருக்கு நல்வரவேற்பிதழ் வாசித்து அளிக்கப்பட்டது. சி. பி. சின்னராசு, எஸ். கே. சாமி ஆகி யோர் உரையாற்றிய பின் டி. வி. சொக்கப்பா தலைமையில் பெரியார் திராவிடர் கழகத்தைத் திறந்து வைத்தார்.

(குடி அரசு 18-3-44 பக்கம் 5)

11-3-44 அன்று திருச்சி பொன்மலையில் கற்கண்டார் கோட்டை ‘திராவிடர் கழக’த் திறப்பு விழாவும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பெரியாருக்கு 102 காலனாக்கள் பணமுடிப்பளித்தனர்.

(குடி அரசு 18-3-44 பக்ம் 10)

**கோவை மாவட்ட திராவிட இளைஞர் மாநாடு**

17-4-44 அன்று ஈரோடு சரஸ்வதி ஹால் என்னும் மண்டபத்தில் கோவை மாவட்ட முதலாவது திராவிட இளைஞர் மாநாடு தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். க. அன்பழகன், இரா. நெடுஞ் செழியன் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள். அனை வரும் வருக.

(குடி அரசு 15-4-44 பக்கம் 5)

மேற்கண்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களில் ஒன்று பெயர் மாற்றத் தீர்மானம் ஆகும். அண்மை யில் நடக்கவிருக்கும் நீதி கட்சியின் மாகாண மாநாட்டில்

அக்கட்சியின் பெயரைத் ''திராவிடர் கழக''மென்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

சேலத்தில் சூன் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெற்ற சேலம் மாவட்ட திராவிட இளைஞர் மாநாட்டு தீர் மானங்களில் முதன்மையானது.

1. நீதி கட்சியையும், தன் மதிப்பியக்கத்தையும், ஒன்றுபடுத்தி திராவிடர் இயக்கமென்று பெயரிட்டு நிதியும், கழகங்களும், தினசரித்தாளும் அமைத்து ஆக்க வேலை செய்ய பெரியால் ஈ. வெ. ரா.வை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(குடி அரசு 8-7-44 பக்கம் 11)

11-7-44 அன்று தஞ்சையில் ஊ. ஆ. பூ. சௌந்தர பாண்டியன் தலைமையில் தஞ்சை மாவட்ட திராவிடர் இளைஞர் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் நீதிக் கட்சியையும் தன் மதிப்பியக்கத்தையும் ஒன்றுபடுத்தி 'திராவிடர் இயக்கம்' என்று பெயரிட வேண்டும்மென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(குடி அரசு 29-7-44 பக்கம் 2)

திராவிடர்களே சேலம் மாநாட்டிற்குச் செல்லுங்கள் என்ற தலையங்கம் எழுதப்பட்டது. அத்தலையங்கத்தில் நாம் திராவிடர், நம் கழகம் திராவிடர் கழகம், நமக்கு வேண்டியது திராவிட நாடு என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

(குடி அரசு 12-8-44 பக்கம் 6)

20-8-44இல் நடத்த இருந்த சேலம் மாநாடு சரியான ஏற்பாடு செய்யப்படாததால் 27-8-44க்குத் தள்ளி வைக்கப் பட்டு நடைபெற்றது.

**சேலம் மாநாட்டுக்கு வரும் தீர்மானங்கள் கட்சி அரசியல் தீர்மானங்கள்**

1. (அ) இந்த மாநாடானது ஜஸ்டிஸ் கட்சி என்னும் இக்கட்சிக்கு உள்ள தென்இந்தியர் நலஉரிமைச் சங்கம் என்ற பெயரை திராவிடர் கழகம் `Dravidian Association' என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது.

(குடி அரசு 26-8-44 பக்கம் 3)

சேலம் மாநாடு ஒரு வாரம் தள்ளிப் போடப்பட்டதால் மாநாட்டிற்கு வரும் தீர்மானங்கள் முன் கூட்டியே குடி அரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

27-8-44இல் நடைபெற்ற சேலம் மாநாடு சேலம் நகரையே உலுக்கியது. ஊர்வலத்தில் 30,000 பேர், உயிருக்குத் துணிந்த வீரர்கள் 5,000 பேர், 40 குதிரைகள், 2 யானைகள், 4 சக்கர இரட்டைக் குதிரை சாரட்டில் தலைவர் ஊர்வலம் டஜன் கணக்கான கார்கள் பின் தொடர்ந்தன. புதிய உடையுடனும் கொடியுடனும் 300 தொண்டர்கள், 5 ஜதை பாண்டு, 10 ஜதை மேளம், 100 தப்பட்டை, 40 கொம்புகள் பெரியார் வாழ்க, திராவிட நாடு திராவிடர்க்கே, திராவிடர் கழகம் ஓங்குக என்ற முழுக்கம் பிற்பகல் மாநாடு பெரியார் தலைமையில் மாலை 3 மணிக்கு கூடியது. ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை அதாவது தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்பதைத் திராவிடர் கழகம் என்பதாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் தோழர் அண்ணாதுரை அவர்களால் முன்மொழியப்பட்டது. தோழர் டி. சண்முகம் அவர்கள் அமோதித்தார். இத்தீர்மானத்தைத் தோழர்கள் சி. ஜி. நெட்டோ, அ. கணேச சங்கரன், எ. வேணுகோபால் ஆகியவர்கள் விஷய ஆலோசனைக் கூட்டத்தில் அனுமதித்து விட்டுப் ''போதுமான கால நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை'' என்பதாக ஆட்சேபித்தார்கள். தலைவர் பெரியார் எழுந்திருந்து 'ஜஸ்டிஸ்' என்பது பத்திரிகையின் பெயர் என்றும், இக்கட்சியின் பெயர் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பதாகவும், சேலத்தில் 26-11-43 இல் கூடிய நிர்வாக சபை கூட்டத்தில் (இவர்களும் கூடியிருந்த நிர்வாகசபைக் கூட்டத்தில்) ஜஸ்டிஸ் கட்சி என்றிருப்பதை 'திராவிடர் கழகம்' என்பதாக மாற்ற வேண்டுமென மாகாண மாநாட்டுக்கு சிபாரிசு செய்திருப்ப தாகவும் மற்றும் பல சங்கங்கள் ஆதரித்திருப்பதாகவும் தென்னிந்தியர் என்றாலும் திராவிடர் என்றாலும் ஒன்றுதான் என்றும் தெரிவித்தார். பின்னர் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆயிரக்கணக்கான கைகள் உயரத்தூக்கின. ஆட்சேபிக்கிறவர்கள் கை தூக்கும்படி கேட்கப்பட்ட போது யாரும் கை தூக்கவே இல்லை. ஆட்சேபித்தவ ர்களும் சும்மா இருந்து விட்டார்கள். எனவே, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(குடி அரசு 2-9-44 பக்கம் 3)

**சேலம் மாநாடு பற்றிப் பெரியார் அறிக்கை**

சேலம் மாநாட்டைப் பற்றி ஒரு சிலர் தாறுமாறான அறிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகிறார் கள். அவைகள் ஒன்றும் நேர்மையானவை அல்ல, பெரும் பாலான விஷயங்கள் உண்மையுமல்ல. அந்த அறிக்கைகள் எனக்கு ஒன்றும் அனுப்பவுமில்லை.

மாநாட்டில் ஜஸ்டிஸ் கட்சிக்கு தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்று, இருந்த பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்றப்பட்டது உண்மைதான், ஆனால் அத்தீர்மானம் பொதுக்கூட்டத்தில் பிரேயித்து ஆமோதித்த வுடன் இதற்குப் ''போதிய நோட்டீஸ் இல்லை'' என்று மாத்திரம் தோழர் நெட்டோ சொன்னார். அதை கணேசங்கரன் ஆதரித்தார். தலைவர் அதற்குச் சமாதானம் சொன்னார்.

''சேலத்தில் 26-11-43ம் தேதியில் நடந்த S. I. L. F நிர்வாகச் சபைக் கூட்டத்தில்'' பெயர் மாற்றம் நிறைவேற்றப்பட்டு அதைச் சேலத்தில் நடக்கும் மாகாண (இந்த) மாநாட்டுக்குச் சிபாரிசு செய்வதாகவும் தீர்மானிக் கப்பட்டிருக்கிறது. அதில் தோழர்கள் நெட்டோ, இரத்தினம் பிள்ளை முதலியவர்களும் இருந்திருக்கிறார்கள். அதன் பின் சுமார் 20-க்கு மேற்பட்ட ஜில்லா, தாலுக்கா மாநாடு களில் இது நிறைவேற்றப்பட்டு சேலம் மாநாட்டுக்குச் சிபாரிசு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட் டிற்கும் இதுபற்றி வெளியூர்களில் இருந்து ஏராளமான தீர்மானங்கள் வந்திருக்கின்றன, அவை தோழர் நெட்டோ அவர்கள் வசமே இன்னமும் இருக்கின்றன.

அன்றியும் தென் இந்தியர் கழகம் என்பதும் திராவிடர் கழகம் என்பதும் ஆதியில் ஏற்படுத்தினவர்களின் கருத்தில் வித்தியாசம் கொண்டதல்ல, மக்களுக்கு இன எழுச்சியும், நாட்டு எழுச்சியும் ஏற்படுவதற்கும், திராவிட நாடு கேட்பதற்கும் ஊக்கம் அளிப்பதற்கும் ஆகவே அச்சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது'' என்று சொன்னார்.

பிரதிநிதிகள் 'ஓட்டு ஓட்டு' என்றார்கள், ஓட்டுக்கு விடப்பட்டது; ஏகமனதாய் நிறைவேறிற்று. அப்போது தோழர் நெட்டோ அவர்களும் மற்றும் இப்போது அறிக்கை விடும் நண்பர்களும் இருந்தார்கள். எதிர்ப்புக்கு நெட்டோ வாவது இதர நண்பர்களாகவது கை தூக்கியோ, ஓட்டு கொடுக்கவில்லை; வேறு ஒருவரும் எதிர்ப்புக்கு ஓட்டு கொடுக்கவில்லை. இதுதான் பெயர் மாற்றத் தீர்மானத்தினு டையவும் அதன் எதிர்ப்பினுடையவும் நடவடிக்கையாகும். நெட்டோ முதலியவர்களால் பத்திரிகைகளுக்கு வந்த சேதிகள் பின்னால் யோசித்துச் சொல்லப்படுபவைகளாகும்.

மாநாடு வெற்றியாக முடிந்து தலைவர் முடிவுரை ஆனவுடன் ராவ்சாகிப் துரைசாமி பிள்ளை அவர்கள் வரவேற்புக் கழகச் சார்பில் தீர்மானங்களைப் புகழ்ந்து கூறித் தலைவருக்கும், தோழர் பாண்டியனுக்கும், வரவேற்புத் தலைவர், காரியதரிசி, ஆகியவர்களுக்கும் பிரதிநிதி களுக்கும், மாநாட்டுக் கொட்டகை உதவிய முனிசி பாலிட்டியாருக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த கைத்தட்டலிடையே நன்றி கூறினார்கள். மாநாடு எவ்வித ஒரு சிறு அபிப்பிராய பேதமோ மேற்கண்டதைக் தவிர ஒரு சிறு எதிர்ப்போ இல்லாமல் நடைபெற்றது. தீர்மானங்கள் யாவும் ஏகமனதாய் நிறைவேறின. இதற்குப் பத்திரிகை நிருபர்களும் சர்க்கார் ஊ. ஐ. னு. சுருக்கெழுத்தாளர்கள், ரிக்கார்டுகளும், அதிகாரிகளும், கட்சியாளர்களும், பிரதிநிதிகளும் சாட்சியாகும்.

**ஈ. வெ. ராமசாமி**
**(குடி அரசு 2-9-44 பக்கம் 8)**

**குறும்புத்தனமான அறிக்கைகள்**

சேலம் மாநாடு முடிந்த பிறகு பத்திரிகைகளில் சிலர் குறும்புத்தனமான அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கிறார்கள். நம் எதிரிகளான பார்ப்பனர் முதலிய பத்திரிகைக்காரர்கள் இந்த சமயத்தைத் தங்களுக்கு அனுகூலமாக ஆக்கிக்கொண்டு அதற்கு விஷமத்தனமான பெரிய தலைப்புக் கொடுத்து அதிக விளம்பரம் செய்து வருகிறார்கள். நம் இயக்கம் செய்ய வேண்டிய வேலைகளும் அது அடைய வேண்டிய வெற்றிகளும் இந்த இரு கூட்டத்தினால் தடைப்பட்டு போய்விடாது என்கிற தைரியத்தாலேயே அவைகளை நாம் பிரமாதமாக லட்சியம் செய்வதில்லை என்பதோடு நம் உண்மைத் தோழர்களும் மதிக்கமாட்டார்கள் என்பதும் நாம் அறிவோம்......................

ஒரு சபைக்குப் பெயர் மாற்ற அச்சபை பொது மாநாட்டிற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுவது அறிவுரையாகாதென்றே சொல்வோம்.

அடுத்த ஆட்சேபனை போதிய நோட்டீசு (அறிவிப்பு) இல்லை என்பது. இது பரிகசிக்கத்தக்கதே யாகும்.

நோட்டீசு இல்லாமல் மாநாடுகளில் எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ மாகாண மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றாலும் அந்த முறை யையோ, மாற்றியதையையோ இப் பேர் மாற்றத் தீர்மானத் திற்கு நாம் உரிமை பாராட்டவில்லை.

இத்தீர்மானமானது முறைப்படி சேலத்தில் 10 மாதங்க ளுக்கு முன் கூட்டப்பட்ட நிர்வாக சபைக் கூட்டத்தில் தோழர்கள் இரத்தினசாமி, நெட்டோ, அவர்கள் வீற்றிருந்த கூட்டத்தில் நெட்டோ அவர்களின் ஆதரிப்பின் பேரிலேயே "தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதை திராவிடர் கழகம் என்று அழைக்கப்பட வேண்டும்" என்று ஏகமனதாக தீர்மானித்து 'இந்த தீர்மானத்தை மாகாணப் பொது மாநாட் டுக்கு இக் கமிட்டி சிபாரிசு செய்கிறது' என்று தீர்மானித்து இருப்பதோடு 'அப்படி கூட்டப்படும் மாநாட்டை சேலத்தில் நடத்த வேண்டும்' என்றும் அந்த வினாடியிலேயே மாநாட்டை அறிவித்தவர்கள் இதே தோழர்கள் இரத்தினம் பிள்ளையும் நெட்டோ அவர்களும் ஆவார்கள்.

அன்றியும் சேலம் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு பிறகு கூட்டப்பட்ட பல ஜில்லா, தாலுக்கா மாநாடுகளில் இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இவை மாத்திரமல்லாமல் 27-8-44 இல் நடந்த சேலம் மாநாட்டுக்குக் கூட மாநாட்டாரின் அறிக்கைப்படி இது சம்பந்தமாக பல ஸ்தாபனங்களிலிருந்தும், தனிப்பட்ட வர்கள் இருந்தும் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இந்த 10 மாதகாலமாக இவை பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத் தப்பட்டிருக்கின்றன. இனி எந்த விதமான முன் அறிவிப்பு (நோட்டீசு) வேண்டுமென்று இவர்கள் கருதுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தின் போது இந்த ஆலோசனைக்காரர்கள் இருந்து இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் போது ஒரு அதிருப்தியும் காட்டாமல் ஆதரவாளர்களாக இருந்து விட்டு, வேறு காரியங்களுக்காக இவர்கள் மீது ஒழுங்கு முறை நடவடிக்கைத் தீர்மானம் நிறைவேறியவுடன் அத்தீர்மானம் தங்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள இடமிருக்கிறதென்று கருதி பயந்து போய் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு தந்திரமாக இந்தச் சாக்கை ஒரு சிலர் உபயோகிக்க, பின்னால் யோசனை செய்து கண்டு பிடிக்கப்ப பட்டதல்லாமல் இதில் வேறு உண்மையோ, நியாயமோ, நாணயமோ என்ன இருக்க முடியும் என்று கேட்கிறோம்.

(குடி அரசு 9-9-44 பக்கம் 6, 7)

சேலம் மாநாட்டின் செயலாளராக இருந்தவர் நெட்டோ, சேலம் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவராக இருந்தவர் இரத்தினம் என்பவர் இவர்கள் இருவரும் தான் திராவிடர் கழகம் என்பதற்குப் பதிலாக பழைய ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரே இருக்க வேண்டும். பெயர் மாற்றம் தேவையற்றது அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிக்கை விட்டவர்கள்.

சேலம் மாநாட்டில் பெரியாரின் தலைமையை மாற்ற வேண்டுமென்று செயல்பட்டவர் பாலசுப்பிரமணியம் ஆவார், அவரும் பின்னர் தன்பேச்சை பின் வாங்கிக் கொண்டார்.

கி.ஆ.பெ. விசுவநாதம் மாநாட்டுத் திறப்பாளர். அவர் பெரியாரைப் பற்றி கிண்டலும் கேலியுமாகச் சில வார்த் தைகள் பேச எதிரே இருந்தவர்கள் அவரை உட்காரும்படி முழுக்கமிட்டவுடன் பெரியாரைப் புகழ்ந்து பேசிவிட்டுப் பெரியாரின் சர்வாதிகாரத் தன்மை தேவைதான் என்று கூறி முடித்துவிட்டார்.

அருகோபாலன் கூறுவது போல கி.ஆ.பெ. விசுவநாதம் எந்தத் தீர்மானமும் கொண்டு வரவில்லை.

(குடி அரசு 2-9-44 பக்கம் 2)

கி.ஆ.பெ. அவர்களைப் பற்றி 1984இல் எம்ஃபில் ஆய்வு செய்த மணிமேகலை என்பவர் அவர் உயிருடன் இருக்கும் போதே அவரிடம் நேர் காணல் செய்துள்ளார். சேலம் மாநாட்டைப் பற்றி அவரிடம் கேட்டு பதிவு செய்துள்ளதில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் பெயரைத் 'தமிழ் நாடு நீதிக்கட்சி' என்ற பெயரில் மாற்றி அமைத்து ஆதரவு திரட்ட வேண்டுமென்ற தமது விருப்பத்தைத் தெரிவித்தார் என்று தான் பதிவு செய்துள்ளார்.

(முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், வ. மணிமேகலை பக்கம் 48)

கி.ஆ.பெ. விசுவநாதம் நீதிக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து 1942ல் விலகும்போது அதற்கான பல காரணங்கள் கூறியிருந்தார்.

ஜஸ்டிஸ் கட்சி எல்லோராலும் போற்றப்பட வேண்டு மானால் அடியிற்கண்ட வேலைத் திட்டத்தைப் போன்ற ஒரு முறையைக் கொண்டு கட்சியை பலம் பொருந்திய ஸ்தாபனமாக ஆக்குவதில் மூலம் தான் முடியும் என்ற எனது எண்ணத்தில் இன்றும் கூட மாறுதல் அடைய விரும்புவதில்லை என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி நீதிக் கட்சியின் வளர்ச்சிக்குப் பல ஆக்கப்பூர்மான யோசனைகள் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பெயர் மாற்றம் பற்றியோ பெரியார் கன்னடர் என்பது பற்றியோ ஒருவரி கூட இல்லை. கடிதத்தை முடிக்கும் போது கூட இவைகளை எனது ஆலோச னைகளாகக் கட்சியின் நலனுக்காகக் குறிப்பிட்டுள்ளேன். நான் சாதாரண அங்கத்தினன் என்ற முறையில் என்னால் இயன்ற உதவிகளையும் எக்காலத்திலும் செய்யக் காத்திருக்கின்றேன் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மேற்கண்ட ஆய்வு நூல் பக்கம் 121-127)

மேற்கண்ட அறிக்கையின் மூலமும், சேலம் மாநாட்டில் அவர் கொண்டு வர நினைத்த தீர்மானம் 'தமிழ் நாடு நீதி கட்சி' என்ற பெயரின் மூலம் அவர் பெரியாரைக் கன்னடர் என்று வெறுத்தார் என்பதற்கோ, தமிழர் கழகம் எனப் பெயர் மாற்ற முயன்றார் என்பதற்கோ எந்த வித சான்றும் இல்லை. எனவே அருகோபாலனின் கூற்றாகிய காலையில் தமிழர் கழகம் என்ற பெயரை மாலையில் பெரியார் மாற்றினார் என்பது சுத்தமான வடிகட்டின பொய் என்பது புலப்படும்.

அருகோ கூறும் இன்னொருவர் அண்ணல் தங்கோ, சுவாமிநாதன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் அன்றைய வடஆர்க்காடு மாவட்டம் (வேலூர் மாவட்டம்) குடியற்றம் பகுதியைச் சேர்ந்தவர். அவர் இந்திய தேசிய காங்கிரசில் தீவிரமாக வேலை செய்து வந்தவர். 1934இல் காந்தி தமிழ்நாட்டிற்கு வந்த போது அவரைத் தமது பகுதியில் பேச செய்வதற்கு முன் அனுமதி பெற்று குடியற்றம் பாலற்றங் கரையில் மிகப் பெரிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். இவருடைய வளர்ச்சியை விரும்பாத பார்ப்பன இராசாசி, காந்தி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதபடி பாதையை மாற்றி அழைத்துச் சென்று விட்டார். இதனால் வெறுப்புற்ற சுவாமிநாதன், பார்ப்பன எதிர்ப்பியக்கமான சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். வடஆர்க்காடு மாவட்டத்தில் செல்வாக்குடன் இருந்தவர் சேலம் நீதிகட்சி மாநாட்டில் தீர்மானம் கொண்டுவரும் அளவுக்குச் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை. அவருடைய பெயர் அந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலிலோ, இதழ்களிலோ இல்லை. இவர் கி. ஆ. பெ.வுடன் சேர்ந்து தமிழர் கழகம் எனப் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார் என்பது அருகோவின் கற்பனையே ஆகும்.

24, 25-8-1940 நாள்களில் திருவாரூரில் நடைப்பெற்ற தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் 15ஆவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முதன்மை யானது அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது நாம் அனைவரும் திராவிடர் என்றே பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்துக்கள் என்று பதிவு செய்து கொள்ளக் கூடாது. என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவர் அண்ணல் தங்கோ ஆவார். அதே திருவாரூர் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைச் செயல்படுத்த ஒரு குழு அமைக்கப் பட்டது. அக் குழுவில் கி.ஆ.பெ. விசுவநாதமும் ஒருவராவார். அப்போது அவர் நீதிக் கட்சியின் செயலாளராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(குடிஅரசு 1-9-1940 பக்கம் 12)

சேலம் மாநாடு முடிந்த பிறகும் கி. ஆ. பெ. விசுவநாதம் நாங்கள் தான் உண்மையான ஜஸ்டிஸ் கட்சி என்று கூறிக் கொண்டிருந்த பி. டி. இராசன், பாலசுப்பிரமணியம் குழுவில் நீதிக் கட்சியில் தான் இருந்தார்.

சில ஆண்டுகள் கழிந்த பின்பே அவர் 1947இல் தமிழர் கழகம் என்ற அமைப்பையும் 'தமிழர் நாடு' என்ற இதழையும் நடத்தி வந்தார். அவர் 21-6-1959இல் நடத்திய திருச்சி வானொலி நிலையத்தில் எழுதப்பட்டிருந்த 'ஆகாசவாணி' பெயர்ப் பலகையைத் தார்ப் பூசி அழிக்கும் போராட்டத்தை நடத்திய போது பெரியார் சென்று அதில் கலந்து அவருடைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

(மேற் கண்ட நூல் பக்கம் 89)

மா.பொ.சி. இந்திய தேசிய காங்கிரசில் ராசீவ் காந்தி தலைமையில் சேருகின்றவரையில் தமிழரசு கழகத்தை வைத்துக்கொண்டுதான் இருந்தார். தமிழரசு கழகம் என்ற பெயரை வைத்துக்கொண்டுதான் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பென்றும் அதன் தலைவர் பிரபாகரனை பயங்கரவாதி என்று கூறிக்கொண்டு ராசீவ் செயவர்தனே ஒப்பந்தத்தை ஆதரித்து தமிழகம் முழுவதும் துக்ளக் சோ மற்றும் ஜெயகாந்தன் போன்ற தமிழின துரோகிகளுடன் இணைந்து பரப்புரைச் செய்தார். (மா.பொ.சி., ஈழத்தமிழரும் நானும் பக். 186).

எனவே தமிழர் என்ற பெயர் கொண்ட அமைப்பை எல்லாம் திராவிட இயக்கத்தினர் அழித்தனர் என்பதெல் லாம் வடிகட்டின பொய்யேயாகும்.

●

தமிழ்த் தேசிய விடுதலைப் போராளி
தோழர் தமிழரசன் தாயார்

# து.பதூசம்மாள்

## படத்திறப்பு - நினைவேந்தல்




தமிழ்த் தேசிய விடுதலைப் போராளி தோழர் தமிழரசன் தாயார் து. பதூசம்மாள் படத்திறப்பு-நினைவேந்தல் நிகழ்வு 14.12.2020 திங்கள் மாலை 4.00 மணிக்கு சென்னை, குசப்பாக்கம் செய்தியாளர் அரங்கில் நடைபெற்றது.

தோழர் நிலவழகன் தலைமைத் தாங்கினார். தி. வேல்முருகன், பதூசம்மாள் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

தோழர்கள் விடுதலை இராசேந்திரன், பொழிலன், வாலாசா வல்லவன், தமிழ் முகிலன், குடந்தை அரசன், தெய்வமணி, சுப்பு மகேசு, செவ்வேள், விடுதலைச் செல்வன், பாவேந்தன், குமரன், அங்கயற்கண்ணி, பிரபாகரன் உள்ளிட்ட தோழர்கள் நினைவேந்தல் உரையாற்றினர். தொல். திருமாவளவன், நா.ம. உறுப்பினர் காணொளி வாயிலாக இரங்கலுரையாற்றினார். இறுதியாக செல்வமணி நன்றியுரையாற்றினார். தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கமும், தமிழக மக்கள் முன்னணியும் இந்நிகழ்வை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தது.



# திங்கள் நாள்காட்டி

**வெளிவந்துவிட்டது**
**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின்**
**திங்கள் (மாதம்) நாள்காட்டி .**
**நேர்த்தியான வடிவமைப்பில் நம் தலைவர்களுடைய படங்களுடனும் அரிய செய்திகளுடனும் போற்றிப் பாதுகாக்கத் தக்க வகையில் குறைந்த விலையில் பொலிவோடு வெளிவந்துள்ளது.**

பிற விளக்கங்களுக்கும், நாள்காட்டி பெறுவதற்கும் ...

**8668109047 / 8608068002 / 8428732983**


## இரா. இராணி மறைவு



இராணிப்பேட்டை மாவட்டம், வாலாசாப்பேட்டைச் சேர்ந்த பெரியார் பெருந்தொண்டர் வா. கிருட்டிண மூர்த்தியின் மருமகளும் கி. இராவணனின் துணைவியாருமான இரா. இராணி அவர்கள் உடல் நலக் குறைவால் 17-12-2020 அன்று இயற்கை எய்தினார். அம்மையாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு மா.பெ.பொ.க.சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# சாதித்தோம்.. சாதிப்போம்.. வாருங்கள்..!

**மதனகவி**



பெரியாரின் அரசியல் அடியொற்றி உழைக்கும்
அறிஞர் ஆனைமுத்து தலைமை வழியில்
இந்தியாவில் பொதுமை மலர்வதையே நோக்கமாய்..
மார்க்சிய பெரியாரிய அம்பேத்கரிய வழியில்
நாற்பத்து நான்காண்டாய் அரசியலில் மா.பெ.பொ.க ...

மண்டல் ஆணையத்தை அமைக்கத் தோன்றினோம்..
பிற்படுத்தப் பட்டோருக்கு இருபத்தேழு வென்றோம்..
தமிழ்நாடு அரசின் கல்வி வேலையில்
அய்ம்பது விழுக்காட்டையும் பெற்றுத் தந்தோம்...

பெரியாரின் சிந்தனைகளை உலகிற்கு வழங்கினோம்..
அம்பேத்கரின் வரலாற்றை தமிழர்க்குக் கொடுத்தோம்..
பவுத்தம் வள்ளுவம் பகுத்தறிவுக் கல்வியை
அறக் கட்டளையில் மாணவர்க்குக் கற்பிக்கிறோம்...

அறிவுத் தளத்தில் நாற்பத் தைந்தாண்டில்
அரியபல்துறை அறிஞர்களின் கட்டுரைகள் தாங்கி
சிந்தனையாளன் பொங்கல் மலர்-2021 வெளியீடு..
சுயமரியாதை சமதர்மத்தை வென்றெடுக்க மாநாடு...

ஒரேநாடு;ஒரேமொழி வேளாண் குடிமைச்சட்டம் காசுமீரமென
ஓர்மைக்கு விலைபேசிக் கார்ப்பரேட்டின் கூலியாய்
நாளும்வீச்சாய் பாசிசத்தை ஏவுகிறார் மோதியே..
நாடாளுமன்ற சனநாயகமும் சட்டமும் மோசடியே!

கட்டப்பட்டுள்ள இந்தியச் சிறையைத் தகர்த்தெறிந்து
தேசிய இனங்களின் கூட்டாட்சியை அமைப்போம்..
அடிமை விலங்கை உடைத் தெறிந்து
தன்னுரிமைத் தமிழ்நாட்டை ஆக்குவோம் வாருங்கள்!

# "மாவோ" என்றழைக்கப்படும் மாசேதுங்

- இரா.திருநாவுக்கரசு

"மாவோ" என்றழைக்கப்படும் மாசேதுங் என்ற மார்சின் மாணவர், 1893, டிசம்பர் 26 அன்று சீனத்திலே வறுமையானதொரு குடும்பத்தில்தான் பிறந்திருக்கிறார். இரவில் வயல்வெளியில் வேலை, பகலில் கல்வி என்ற அளவில் அவரது சிறு வயது அமைந்திருக்கிறது. 13 வயதில் பள்ளிக்கல்வியை நிறுத்திவிட்டு,முழுநேர வயல்வெளியில் வேலை செய்தார்.

14 வயதில் 20 வயது பெண்ணை மணமுடித்து வைக்கின்றனர் அவரது பெற்றோர். ஆனால் அப்பெண்ணுடன் அவர் ஒரு நாள் கூட வாழவில்லை. ஒரு வாய்ப்பாக....''தலைநகர் பீகிங் சென்று பல்கலைக்கழக நூல் நிலையத்தில் உதவியாளராக பணியாற்றினார்.அந்த பல்கலைக்கழகத்தில் புரட்சிகர சிந்தனையாளர்களுடன், கம்யூனிஸ்டுகளுடன் பழகும் வாய்ப்பை பெற்றார்.''அந்த சூழ்நிலையில்,'' "எச்சரிக்கை தரும் வார்த்தைகள்" என்ற நூலை வாசிக்கிறார்.

சீனாவின் பலவீனங்களையும், மேற்கத்திய நாடுகளின் வலிமையும் புரிந்து கொள்கிறார். இளைஞர் மாசேதுங்கை இடதுசாரி கொள்கை மிகவும் கவர்ந்தது.12 தலைவர்களுடன் இணைந்து சீன பொதுவுடைமைக் கொள்கையை தோற்றுவிக்கிறார்.1935 -ல் கட்சியின் தலைமை பொறுப்புக்கு வருகிறார். கட்சி வலிமைப் பெறுகிறது. சீனா ஒரு விவசாய நாடு. விவசாய நிலங்களெல்லாம் நில பிரபுக்களுக்கே சொந்தமானதாக இருந்தது. பெரும்பாலான விவசாய மக்கள் நிலமற்றவர்களாகவே இருந்தனர்.


"உழுபவருக்கே நிலம் சொந்தம்" என்ற முழக்கத்தை முன் வைத்து நிலமற்ற விவசாயிககளை ஒன்று திரட்டி ஆயுதம் தாங்கிய ஒரு படையை நிறுவினார். அந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு மார்க்சியத்தை அறிமுகப்படுத்தினார்.

பகுதி பகுதியாக உருவாக்கப்பட்ட இந்த படைகளை பிறகு ஓர் கட்டுப்பாடு மிக்க இராணுவப் பிரிவாக மாற்றினார். அதற்கு, கம்யூனிஸ்ட்டு கட்சியை தலைமை ஏற்க வைத்தார்.

சியாங் கே ஷோக் தலைமையிலானத் தேசிய அரசை எதிர்த்து வலிமை மிக்கப் போராட்டத்தைக் கட்டமைத்தார்.

இதில் சீன செம்படை வீரர்கள் 85000 பேரும், கம்யூனிஸ்டு கட்சியினர் 15000 பேரும் இரவும் பகலுமாக இடி, மின்னல், மழை, வெயில் என்று பாராமல் 3000 கிமீ தொலைவிலுள்ள ஸ்கெ சுவான் நகரை நோக்கி நெடும் பயணம் மேற்கொண்டனர்.

இந்த பயணத்தில்....''நிரந்தரமாக பனி மூடியிருந்த 5 மலைத்தொடர்கள் உள்ளிட்ட 18 மலைத்தொடர்கள், 24 ஆறுகள், 62 மாநகரங்கள் கடந்தனர். வழியில் 25,000 வீரர்கள் மரண மடைந்தனர்.



இரண்டு ஆண்டுகள் போராட்டத்திற்கு பிறகு சீன நிலப்பரப்பு முழுக்க பொதுவுடைமையாளர் கைக்கு வருகிறது. 1949 அக்டோபர் 1-இல் சீன மக்கள் குடியரசு என பிரகடனம் செய்யப்பட்டது. 30 ஆண்டுகள் உள் நாட்டு போரினாலும், பழைய மரபுகளில்ஊறித்திளைத்தாலும் இல்லாமையும் கல்லாமையும் தலை விரித்தாடியது அப்போது சீனாவில்.

"வலிமையும் வளமையும்" கொண்ட சீனாவை உருவாக்க கடுமையாக உழைத்தார் மாவோ.நவீன தொழில் முன்னேற்றம் அடைவதற்கு முயற்சித்தார்.

கிராம புறங்களை விடுதலை செய்து நகர்புறங்களை சுற்றி வளைத்து விடுதலை செய்ய வேண்டும் என்ற புதிய தத்துவத்தை மாசேதுங் முன் வைத்தார். இதையே 'மாவோவின் மக்கள் போர் பாதை' என்று அழைக்கப்பட்டது. இன்று கூட இதைத்தான் இந்தியாவிலும் நேபாளத்திலும் மாவோயிஸ்டுகள் முன்னெடுக்கின்றனர்.

அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாட்டு விடுதலைக்காகவும், பண்ணை ஆதிக்கத்தை எதிர்த்து விவசாயிகளின் விடுதலைக்காகவும் போராடி புரட்சி செய்து ஏற்படுத்துகிற ஒரு அரசாங்கத்தை மக்கள் ஜனநாயக அரசாங்கம் என்று விவரித்தார் மாசேதுங்.

நூறு பூக்கள் மலரட்டும்,நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும் என்பது கலை வளர்வதற்கும்,அறிவியல் முன்னேறுவதற்கும், நமது நாட்டின் சோசலிச கலாச்சாரம் செழித்தோங்குவதற்கும் உரிய கொள்கையாகும். கலையின் பல்வேறு வடிவங்களும், கருத்துக்களும் சுதந்திரமாக வளரலாம்.அறிவியலில் பல்வேறு கருத்துக்களும் சுதந்திரமாக முகிழ்த்தெழலாம். ''கலையின் குறிப்பிட்ட ஒரு நடையை அல்லது ஒரு சிந்தனை முறையை திணித்து மற்றொன்றை தடை செய்ய நிர்வாக நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டால், அது கலை அறிவியல் வளர்ச்சிக்கு தீங்கு பயக்கும் என நாம் கருதுகின்றோம" என்ற மாவோவின் கருத்து இன்றளவும் விவாதத்திற்குரியதாகவே இருக்கிறது. கொட்டும் மழையிலும், பனியிலும் பல உயிர்களை இழந்த பிறகும் தலை நகர் தில்லியின் சாலையெங்கும்''தீரமுடன் போராடிக்கொண்டிருக்கும் விவசாய பெருங்குடி மக்களின் போராட்டத்திற்கு ...''கிழக்கில் உதித்த இன்னொரு செங்கதிர் (மாசேதுங்) ஒளி பாய்ச்சட்டும்!

# அமெரிக்கப் பணத்தில் கொழிக்கிறது மக்கள் விரோத
# ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், பார்ப்பனியமும்

**கி. நடராசன்,** முகநூல் பதிவு

இந்திய வளர்ச்சி மற்றும் புனர் வாழ்வு நிதியம் என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் 1989 இல் பதிவு செய்யப்பட்டது. அந்நாட்டு வரிச் சலுகைக்கான சட்டம் 501(2) (3) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனத்தின் நோக்கமாக, இந்தியாவின் கிராம வளர்ச்சி, பழங்குடியினர் நலம் மற்றும் நகர்ப்புற ஏழைகள் நலன் என்பவை நிர்ணயிக்கப்பட்டன. 2000-த்தில் - இந்த நிறுவனம் திரட்டிய தொகை 3.8 மில்லியன் அமெரிக்க டாலர், விநியோகிக்கப்பட்டுள்ளது. அவுட்லுக் வார இதழ் (சூலை 22, 2002) வெளியிட்ட ஒரு கட்டுரையில், இந்த நிறுவனத்துக்கும் சங் பரிவார் அமைப்புகளுக்கும் உள்ள தொடர்புகளை அம்பலமாக்கி இருந்தது. உடனே அய்.டி.டி.ஆர்.எப்., இந்தச் செய்தியைத் திட்டவட்டமாக மறுத்தது. தங்களுக்கும் எந்த இசத்துக்கும், தத்துவத்துக்கும், கட்சிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று அந்த மறுப்பு அறிக்கை கூறியது. ஆனால், ஆவணங்களைத் துல்லியமாகப் பரிசீலித்துப் பார்க்கும்போது, அய்.டி.டி.ஆர்.எப்.க்கும், சங் பரிவார்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புகள் திட்டவட்டமாகத் தெரிகின்றன. அதற்கான ஆதாரங்கள் கீழே தரப்படுகின்றன.

அய்.டி.ஆர்.எப். நிறுவனம் அமெரிக்காவின் பல்வேறு மாநில அரசுகளிடம், தங்களுக்கு, வரிச் சலுகைக்கான சான்றிதழ் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளது. அதற்கு படிவம் 1023 என்று பெயர். அதில், இந்தியாவில் கீழ்க் கண்ட 9 முக்கிய நிறுவனங்கள், இந்தியாவில் தங்களின் பிரதிநிதிகளாகச் செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விகார் பாரதி (பீகார்) * சுவாமி விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு)

* சேவா பாரதி (டெல்லி)
* ஜனசேவா வித்யா கேந்திரா (கர்நாடகம்)
* வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (ம.பி.)
* வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (குஜராத்)
* வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (நாகர் ஹவேலி)
* கிரிவாரி வனவாசி சேவா டிரஸ்ட் (உ.பி.)
* ஜி. தேஷ்பாண்டே வனவாசி வஸ்திகிரா (மகாராஷ்டிரம்)

- மேற்குறிப்பிட்ட 9 நிறுவனங்களுமே சங் பரிவார் அமைப்புகள்தான். இதை ஆர்.எஸ்.எஸ். நடத்தும் இணையத் தளங்களிலே காண முடியும். உதாரணமாக விகாஸ் பாரதி, சங் நீரூற்றிலிருந்து கிளம்பிய நீரோட்டம் என்றும், விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் விஸ்வ இந்து பரிஷத்தின் தோழமை அமைப்பு என்றும், ஆர்.எஸ்.எஸ். இணையத் தளங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகளின் கீழ் - 67 துணை அமைப்புகள் இந்தியாவில் செயல்படுவதாகவும், அய்.டி.ஆர்.எப்., அறிவித்திருக்கிறது. ஆக மொத்தம் உள்ள 75 நிறுவனங்களில், 60 நிறுவனங்கள் சங் பரிவார்களோடு தொடர்புள்ள நிறுவனங்களாகும்.

அந்த நிறுவனங்களில் பதிவாகி உள்ள அய்.டி.ஆர்.எப். நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பலரும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு நிகராக இந்து சேவக் சங் (எச்.எஸ்.எஸ்.) என்ற அமைப்பை அமெரிக்காவில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம் ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள்தான் அமெரிக்காவில் இவற்றை நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் தான் அமெரிக்காவில் அய்.டி.ஆர்.எஃப். நிறுவனர்கள். இவர்கள் அமெரிக்காவின் ஆர்.எஸ்.எஸ். ஆன எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர்களாகவும் செயல்பட்டு வருகிறார்கள். அய்.டி.ஆர்.எஃப்.பின் பொதுச் செயலாளராக இருக்கும் ஷியாம் கோகல் காந்தி என்பவர் சான்பிரான்சிஸ்கோ - எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர். அய்.டி.ஆர்.எஃப்.பின் ஆலோசகராக இந்தியாவில் செயல்படுபவர் ஷியாம் பாரன்டே எனும் பார்ப்பனர். இவர்தான், வெளி நாடுகளில் சங் பரிவார் நடவடிக்கைகளுக்கான அமைப்பாளர்; ஆர்.எஸ்.எஸ்.ஸின் அப்சர்வர் பத்திரிகையில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாழ் பார்ப்பனர்கள் 1980களிலிருந்து - இந்துத்துவாவைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினர். இந்தியாவிலிருந்து 1990களில் - அமெரிக்காவுக்குக் குடியேறிய ஏராளமான பார்ப்பனர் கள், இதில் தீவிரம் காட்டினர். குறிப்பாக, அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை, வடக்கு - கிழக்கு பகுதிகளிலும், தெற்குப் பகுதி மாநிலங்களான ஃபுளோரிடா, டெக்சாஸ் மாநிலங்களிலும், இந்துத்துவா அமைப்புகள் வலிமையாகக் கால் பதித்தன. இந்த இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவில் சங் பரிவார்களுக்குத் துணை நிற்பதோடு அய்.டி.ஆர்.எஃப். வழியாகப் பெருமளவு நன்கொடை களைத் திரட்டித் தந்து வருகின்றன.

மத வேறுபாடு இல்லாமல் இந்தியர்களின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய இந்திய வளர்ச்சி (எய்டு) அமைப்பு, குழந்தைகள் மறுவாழ்வு (கிரஸ்), இந்திய வளர்ச்சிக் கழகம் (அய்.டி.எல்.) போன்ற பல பொதுவான தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவில் செயல்பட்டாலும், அய்.டி.ஆர்.எஃப்., இவற்றை எல்லாம் அங்கீகரிப்பது இல்லை. சங் பரிவார்களுடன் தொடர்புடைய

அமைப்புகளை மட்டுமே சேவை நிறுவனங்களாக அது அங்கீகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாகச் சித்திரிக்கவும், இந்திய முஸ்லிம்கள், சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதி களுடன் தொடர்பு கொண்டிப்பதாகவும், குறும் படங் களைத் தயாரித்து, திரையிட்டு நிதி திரட்டும் வேலைகளை அமெரிக்க ஆர்.எஸ்.எஸ். ஆன எச்.எஸ்.எஸ். ஸும், அய்.டி.ஆர்.எஃப்.பும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

**நிதி ஒதுக்கீடு : எதற்கு?**

வளர்ச்சி, புனர்வாழ்வு என்ற பெயரில் இந்தியாவுக்கு அய்.டி.ஆர்.எஃப். அனுப்பிய தொகையில் பெரும் பகுதி, சங் பரிவார்களின் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் - மதப் பகைமையை வளர்ப்பதற்குமே பயன்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

1994 முதல் 2000 வரை அய்.டி.ஆர்.எஃப். இந்தியா வுக்கு அனுப்பிய தொகையில் 75 சதவீதம் (3.2 மில்லியன் டாலர்), ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அமைப்புகளுக்கே அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஒரு சிறுபான்மை அமைப்பு களுக்கும் உதவிடவில்லை. அனுப்பிய தொகையில் 70 சதவீதம் - ஆதிவாசிகளை, இந்து மதத்துக்கு மாற்றவும், அதற்குத் தயார் செய்வதற்கான கல்வி, விடுதிகளை நடத்தவுமே செலவிடப்பட்டு இருக்கிறது. 8 சதவீதம் மருத்துவச் செலவுகளுக்கும், 15 சதவீதம் புனர் வாழ்வுத் திட்டங்களுக்கும், 4 சதவீதம் கிராம வளர்ச்சிக்கும் செலவிடப்பட்டு இருக்கிறது. (ஆதாரம்: அய்.டி.ஆர்.எஃப். - ஆண்டு அறிக்கை - இணையத் தளத்திலிருந்து) புனர் வாழ்வுப் பணி என்ற பெயரில் செலவிடப்பட்ட தொகை கூட - மத அடிப்படையிலேயே செலவிடப் பட்டிருக் கிறது. குஜராத் பூகம்பத்தின்போது - புனர் வாழ்வு நிதியிலிருந்து செலவிட்ட தொகையை, பாதிக்கப்பட்ட இந்துக்களுக்கு மட்டுமே ஒதுக்கினார்கள். இதேபோல் மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட வங்க தேச இந்துக்கள், ராணுவம் மற்றும் போராளிகள் தாக்குதலுக்குள்ளான காஷ்மீர் இந்துக்கள் என்று இந்துக்களுக்கு மட்டுமே, இந்நிறுவனம் உதவிகளைச் செய்துள்ளது. இவற்றில் பாதிக்கப்பட்ட கிறித்தவர்கள், முஸ்லிம்கள் இருந்தாலும் கூட நிவாரண உதவிகள் இந்து மதத்தின் அடிப்படை யிலேயே செய்யப்பட்டன. குஜராத் பூகம்பத்தின்போது ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்பு கள், பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பகுதியைப் புறக்கணித்தன என்று குல்தீப் நய்யார் எழுதினார். (பைனான்சியல் எக்ஸ்பிரஸ், பிப்.21, 2001) இந்து அல்லாத தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பணியில் ஈடுபட வந்தபோது, சங் பரிவார் அமைப்புகள் அவற்றைத் தடுத்து நிறுத்திவிட்டன. (கிறிஸ்டியன் சயின்ஸ் மானிட்டர், ஜன.31, 2001)

**ஆதிவாசிகள் – மத மாற்றம்**

இந்தியாவின் பழங்குடி மக்களை ஆதிவாசிகள் என்ற பெயரில் தான் அழைப்பது வழக்கம்; ஆனால், இந்தியாவின் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான் என்று வரலாற்றைப் புரட்ட விரும்பும் சங் பரிவாரங்கள் இவர்களை ஆதிவாசிகள் அதாவது பூர்வீகக் குடிகள் என்று அழைப்பது இல்லை. மாறாக வனவாசிகள் என்று அழைக்கிறார்கள். பழங்குடியினரான ஆதிவாசிகள், இயற்கையை வழிபடக் கூடியவர்கள். அவர்கள் இந்துக் கள் அல்ல. இந்து சாதி அமைப்பால் கடந்த நூற்றாண்டில் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மீது மதங்கள் திணிக்கப் பட்டன. பலர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அண்மைக் காலமாக, இந்த மக்களை இந்துக்களாக மாற்றும் முயற்சிகளில் சங் பரிவார் தீவிரம் காட்டிச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாகப் பழங்குடியினருக்கான கல்வித் திட்டங்களையும், நல் வாழ்வுத் திட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது. இதற்கான பெரும் நிதி அய்.டி.ஆர்.எஃப். போன்ற அமெரிக்க நிறுவனங்களிட மிருந்து பெறப்படுகிறது.

பழங்குடியினரை இந்து மத மாற்றம் செய்வதற்கே - அமெரிக்காவின் பணம் அய்.டி.ஆர்.எஃப். வழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் என்ற அமைப்புக்கு நிதி உதவி செய்து வருவதாக அய்.டி.ஆர்.எஃப். ஒப்புக் கொண்டுள்ளதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். கிறிஸ்தவர்களாக ஆக்கப்பட்ட - வனவாசிகளை இந்து மதத்துக்கு மாற்றுவதற்காகவே வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் 1950களில் தோற்றுவிக்கப்பட்டது. அந்த வழியில் பழங்குடியினரின் கிறிஸ்தவ மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்துக்களாக மாற்றுவதில், எங்கள் அமைப்பு வெற்றிகளைக் குவித்து வருகிறது - என்று ஆர்.எஸ்.எஸ். வெளியீடே எழுதியிருக்கிறது. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றி, தேசிய நீரோட்டத் துக்குக் கொண்டு வந்து, சமூக விரோத, தேச விரோதி களிடம் இருந்து, அவர்களைக் காப்பாற்றி உள்ளதாக, வனவாசி கல்யாண் ஆஸ்ரமத்துக்கு - அய்.டி.ஆர்.எஃப். நிறுவனமே, தனது ஆவணங்களில் புகழாரம் சூட்டி மகிழ்கிறது.

மதப் பழங்குடியினரை மதம் மாற்றுவதோடு மட்டு மல்ல; அவர்களை இந்து ராஷ்டிரம் அமைப்பதற்கான போராளிகளாகப் பயிற்சி தரும் நட வடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள்; அதற்கும் அமெரிக்காவின் பணம் வருகிறது; அமெரிக்காவின் அய்.டி.ஆர்.எஃப். இட மிருந்து நிதி உதவி பெறும் சேவா பாரதி-தனது அறிக்கை ஒன்றில்-இதை உறுதிப்படுத்துகிறது. பழங்குடியினரில் சில ஆண்களையும், பெண்களையும் தேர்வு செய்து அயோத்தியில் உள்ள ஸ்ரீராம கதா பிராவச்சான் என்ற ராமாயணப் பயிற்சி மையத்துக்கு அனுப்பி சாமியார் களைக் கொண்டு 8 மாத காலப் பயிற்சி தந்து, பிறகு அவர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி பிரச்சாரகர் களாகப் பயன்படுத்துவதாக சேவா பாரதி கூறுகிறது.

இது மட்டுமல்ல, ஆதிவாசிகளை, இந்துக்களாக மதம் மாற்றும் நிகழ்ச்சி, பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றிக்கும் பயன்படுகிறது என்று, சங் பரிவார் தலைவர்களே கூறுகிறார்கள். பழங்குடியினர் வாழும் பகுதிகளில் - ஏகல் வித்யாலயா என்ற பள்ளிகள், அமெரிக்க நிதி உதவியோடு நடத்தப்படுகின்றன. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றுவதில்-இந்தப் பள்ளிகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய பள்ளிகளைத் தொடங்கி நடத்தியதன் மூலமே, பீகாருக்குள் தாங்கள் வலிமை பெற முடிந்தது என்றும், பீகாரில் தாங்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தேர்தலில்

பா.ஜ.க.வுக்குப் பெரிய வாய்ப்பை உருவாக்கியது என்றும், குஜராத்திலும் அதே சோதனைகளைத் துவங்கி - காங்கிரஸ் கோட்டைகளைத் தகர்ப்போம் என்றும் ஜார்க்கண்ட் பகுதியைச் சார்ந்த விஸ்வ இந்து பரிஷத் தலைவர் கௌஷிக் பட்டேல் கூறியிருக்கிறார். (ஆதாரம்: தி டெலிகிராஃப் நாளேடு, ஜூலை 4, 2000)-ஆக, அமெரிக்கப் பணம், மத மாற்றத்துக்கு மட்டுமல்லாமல், பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்து வதற்கும் பயன்படுத்தப் படுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

**மதக் கலவரங்களை உருவாக்கும் திட்டம்**

அமெரிக்காவிலிருந்து சங் பரிவார்களுக்கு வரும் பணம், இந்தியாவில் மதக் கலவரங்களை நடத்துவதற்கும் பயன்படுகிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. சுருக்கம் கருதி, அமெரிக்க நிதி உதவி யோடு செயல் படும் அமைப்புகள் தந்துள்ள ஒரு சில ஒப்புதல் வாக்கு மூலங்களை மட்டும் சுட்டிக் காட்டலாம். மேற்கு குஜராத்தில் வாகை எனுமிடத்தில் அமெரிக்க உதவியோடு வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் நடத்தும் பள்ளியில் சிவாஜியின் படத்துக்குக் கீழே, சிவாஜி மட்டும் இல்லாவிட்டால் நாம் அனைவரும் சுன்னத் செய்யப் பட்டிருப்போம். சிவாஜி தான், நம்மைக் கட்டாய மத மாற்றம் செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றினார் என்று எழுதப் பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் முதல் தலைமுறையினரான அந்த மாணவர்கள் இப்போது இந்துக்களாக மாற்றப்பட்டுள்ளனர். ஒரு இளம் ஆர்.எஸ்.எஸ். காரார் அந்தப் பள்ளியை நடத்துகிறார். கலவரத்துக்கான வெறியை இதன் மூலம் தூண்டி விடுகிறார்கள் என்று, பள்ளியை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய வரலாற்று ஆய்வாளர் அஜய்சிங் எழுதியிருக்கிறார். (ஆசியா வீக், மார்ச் 26, 1999)

அமெரிக்க உதவி பெறும் வனவாசி கல்யாண் பரிஷத்தை நடத்தும் சுவாமி அசீமானந்த் என்பவர் - ஒரு ஆதிவாசி கூட கிறிஸ்தவராக இருக்கக் கூடாது என்று கூறி, அனைவரையும் இந்துக்களாக்கும் தீவிர வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்பதை, டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டின் - செய்தியாளர் அருண் வர்கீஸ் அம்பலப்படுத்தினார். (டைம்ஸ் ஆப் இந்தியா பிப்.11, 1999)

மத்தியப் பிரதேச மாநிலம் ஜாஷ்பூரில் உள்ள வனவாசி கல்யாண் நிறுவனத்தினரால், கிறிஸ்தவ ஆதிவாசிகள் தாக்கப்படுவதையும், மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டதையும், பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தியதையும் ஒரு டாக்குமெண்டரி படமே அம்பலப்படுத்தியது. (Fishers of Men, Documentary by Ranjankanth and Padmavathy Rao, 1997)

அமெரிக்க வாழ் இந்தியரின் உதவியோடு, இந்தியாவில் கலவரங்களும் வெறுப்புகளும் தூண்டி விடப்பட்டதற்கு இவை சில உதாரணங்கள். அவர்களின் உதவியோடு நடத்தப்படும் நிறுவனமான வித்யா பாரதி நடத்தும் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் வரலாறுகள் திருத்தப்பட்டு, இந்து மதவாத உணர்வுகள் தூண்டி விடப் படுவதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

**நிதி பெறும் நிறுவனங்கள்**

அய்.டி.ஆர்.எஃப். எனும் அமெரிக்கா வாழ் பார்ப்பனர்கள் நடத்தும் நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை 184, மாநில வாரியாக நிதி பெறும் நிறுவனங்களின் பெயர்களையும் - நிதியையும், அதன் இணையத் தளங்களில் காண முடிகிறது. இதில் தமிழ்நாட்டில் நிதி உதவி பெறும் நிறுவனங்களையும் பெற்றுள்ள தொகையையும் மட்டும் கீழே தருகிறோம்:


- பாரத் கல்சுரல் டிரஸ்ட் - திருச்சி (45,980 டாலர் - மதத்துக்காக)
- கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை - சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)
- நவஜோதி சாரிட்டி டிரஸ்ட் - சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)
- சிவாலயா - சென்னை (6,650 டாலர் - மதம் - கல்வி)
- ஸ்ரீராம தனுஷ்கோடி அபய ஆஞ்சநேயர் சேவா டிரஸ்ட் (9,500 டாலர் - மதத்துக்காக)
- சுவாமி விவேகானந்தா ரூரல் டெவலப்மெண்ட் சொசைட்டி (82,290 டாலர் - மதம் - கல்விக்காக)
- ஆயுர்வேதிக் டிரஸ்ட் (கோவை) - (2,410 டாலர் - மதம் - சமூக நலனுக்காக)
- யுனிக் பவுண்டேன் டிரஸ்ட் (திருவண்ணாமலை) - (9,035 டாலர் - மதம் - சமூக நலனுக்காக)
- வெர்சல் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை) - (17,500 டாலர்)
- விவேகானந்தா கேந்திரா ராக் மெமோரியல் (கன்னியாகுமரி) - (74,885 டாலர் - மதம் - சமூக கல்விக்காக)
- ஆரோவில் - ஆரோவில் லேண்ட் ஃபண்ட் - 3,01,420 டாலர்
- அர்பிந்தோ ஆக்ஷன் - 4,750 டாலர்
- ஆர்டார்தோ ஆஸ்ரம் - 2,500 டாலர்
- அமெரிக்காவின் அய்.டி.ஆர்.எஃப். வழங்கியுள்ள மொத்த நிதியில்..
- 82.4 சதவீதம் (2,684,915 டாலர்) சங் பரிவார் அமைப்புகளுக்கும்,
- 8.1.சதவீதம் (2,64,660 டாலர்) மத நடவடிக்கைகளுக்கும்,
- 2.2 சதவீதம் (70,620 டாலர்) மதச் சார்பற்ற நடவடிக்கைகளுக்கும்,
- 7.4 (2,49,785 டாலர்) சதவீதம் தெரியாத நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத நடவடிக்கைகள், கல்விப் பணி கள், நிவாரணப் பணிகள் என்ற பெயரில் வாங்கப்பட்ட நிதியும், சங் பரிவாரங்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# முசுலீம்கள் குறித்து அம்பேத்கர்

## கட்டுக்கதைகளும் உண்மை விவரங்களும்

**- ஆனந்த் டெல்டும்டே -**




பார்ப்பனீய, ஆர்.எஸ்.எஸ் சங் பரிவார் கூட்டத்தின் கொடூர நோக்கங்களை தெளிவாகக் கண்டு, அதனை வீழ்த்த கூர்மையானத் தனது எழுத்துக்களை ஆயுதங் களாக்கி அதை எதிரியின் கூடாரத்தை நோக்கி குறி பார்த்து வீசிக்கொண்டிருக்கும் அறிவு ஜீவிதான் எழுத்தாளர் ஆனந்த் டெல்டும்டே அவர்கள். "முஸ்லீம் கள் குறித்து அம்பேத்கர் " என்ற தலைப்பில், 'இந்துத்துவ வாதிகள் பரப்பி வரும் பதினொரு கட்டுக்கதைகளும் அவை குறித்த உண்மை விபரங்களும்' என்றத் துணை தலைப்பில் ஒரு நூலை நமக்கு கொடுத்திருக்கிறார்.

மேலும்....மதவெறி அச்சுறுத்தலுக்குப் பணியாமல், குஜராத் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற முஸ்லீம் மக்களுக்கு துணை நின்று, இந்தியாவின் எதிர்காலத்துக்கு ஒரு நம்பிக்கை ஒளியைக் காப்பாற்றித் தந்த அனைவருக்கும்...."என“இந்நூலை காணிக்கை யாக்கியிருக்கிறார் ஆனந்த் டெல்டும்டே.

முஸ்லீம்கள் மற்றும் கிருஸ்துவர்கள் பற்றி என்ன மனப்பான்மையை இந்துத்துவ சக்திகள் கொண்டுள்ளன வோ, அதே போன்ற மனப்பான்மையைத்தான் தலித்து கள் பற்றியும் கொண்டுள்ளன".என்ற முன்னுரையுடன் தொடங்குகிறது இந்த நூல்,

அம்பேத்கரின் சிந்தனைகள் இந்த மண்ணின் ஒரு விளைபொருள் ஆகும். அதன் சிக்கலை தானே வாழ்ந்து உணர்ந்து அதற்கு ஒரு அனைத்தளாவிய தரிசனத்தோடு கூடிய தீர்வை வழங்க நேர்மையாக முயன்ற ஒருவரின் உருவாக்கமாகும் அது. எவ்வளவுதான் பலவிதப்பட்ட தாக அது இருந்தாலும், சாரத்தில் அது இந்த நாட்டின் புரட்சிகர சக்திகளின் கருத்தியல் கையிருப்புத் தொகுதி யின் ஒரு முக்கியமான பகுதியாகவே அமைகிறது. அதனை நாம் முழு ஆர்வத்தோடும் ஆற்றலோடும் காத்து நிற்பது அவசியமாகும்" என்ற ஒரு அழகான அறிமுகத் துடன் இந்த நூல் பேசத் தொடங்குகிறது.

**இசுலாமியர் மீது அம்பேத்கர் கொண்ட கருத்துக்களாக;**

1.அம்பேத்கர் முஸ்லீம்களுக்கு எதிராக இருந் தார்.“2.முஸ்லீம்களை 'பயங்கரவாதிகள்' என அம்பேத்கர் குறிப்பிட்டார்.“3.அம்பேத்கர் இரு தேசக் கோட்பாட்டை நம்பினார்.“4.அம்பேத்கர் பண்பாட்டு தேசியவாதத்தை நம்பினார்.“5.பவுத்தத்தை ஒழித்தவர்கள் முஸ்லீம்கள் என அம்பேத்கர் கருதினார். 6.அம்பேத்கர் எழுதிய "பாகிஸ்தான் அல்லது இந்திய பிரிவினை"-ஒரு முஸ்லீம் எதிர்ப்பு நூல் 7.முஸ்லீம்கள் எப்போதுமே இந்துக் களுக்கும் இந்தியாவுக்கும் எதிராக வெறுப்பை கக்கி வந்ததாக அம்பேத்கர் எண்ணினார்.“8.இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து அமைதியாக வாழ முடியாது என அம்பேத்கர் நம்பினார். 9.முஸ்லீம்கள் சீர்திருத்தத்துக்கு எதிரானவர்கள் என்று அவர் களை அம்பேத்கர் வெறுத் தார். 10.அம்பேத்கர் இந்துக் களின் தரப்பில் இருந்தார். 11.அம்பேத்கர் ஒரு தேசிய வாதி ஆவார் என்று பல காலமாக இங்கே பரப்பப் பட்டுக் கொண்டிருக்கும் கட்டுக் கதைகளையே தலைப்பு களாக்கி அதை மிக ஆழமாக விவாதித்திருக்கிறார் டெல்டும்டே. “சங்பரிவார் கூட்டத்தின் கறுப்பு பக்கங் களையும், காவிக் கூட்டத்தின் கொடூர சிந்தனைகளையும் அச்சமில்லாமல் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

1935லே மதம் மாற்றம் பற்றி முதன்முதலில் அம்பேத் கர் அறிவித்த நேரத்தில் ,அவரிடம் அவரது தொண்டர் கள் மதம் மாற விருப்பம் தெரிவித்தபோது அவர்களிடம் இசுலாத்துக்கு மாறும்மாறு அவர் அறிவுருத்தியதை ஆதாரத்துடன் இந்நூல் விளக்குகிறது.

அம்பேத்கர் இசுலாமியர் மீது விமர்சனங்கள் கொண்டிருந்தது உண்மை என்றும், அது பகை முரண் அல்ல; நட்பு முரண் என்றும் இந்நூல் பேசுகிறது.“அதற்கு ஆதாரமாக லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டின்போது இசுலாமியத் தலைவர்கள் மீது அம்பேத் கருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை குறிப்பிடுகிறார்.

இசுலாத்தின் சமத்துவக் கொள்கையை உயர்வாக மதித்தார் அம்பேத்கர். இந்தியாவில் இருக்கும் முஸ்லீம் களின் பிற்பட்ட நிலைமைக்கு காரணம், இங்கே அமைந் துள்ள தனித்தன்மையான 'இந்து' சூழல்தான். இந்து சுற்றுப்புறத்தின் இந்த பண்பே முஸ்லீம்களுக்குள் ஓயாத பாதுகாப்பின்மை உணர்வை உருவாக்குகிறது,அவர்களை மிகுந்த பழமைவாதச் சார்பாளராகவும் ஆக்கியுள்ளது.

மேலும், முஸ்லீம்களுக்கிடையே நிலவிய கேடுகளை அவர் விவாதித்த போதெல்லாம்,அவர்களின் பழமைப் பிடிப்பைக் குறித்து கடுமையாக திறனாய்ந்ததாகத் தெரிகிறது.; ஆனால், கூடவே அதற்கான பழி இந்துக் களையே சாரும் என பகுத்தாய்ந்தார். என்ற அம்பேத் கரின் ஆய்வை இந்நூலிலே நிறுவுகிறார்.

பாகிஸ்தான் அல்லது இந்திய பிரிவினை "என்ற அம்பேத்கரின் ஆய்வு நூலில்,“சிறுபான்மையினருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துக் கொள்ள இந்துப் பெரும் பான்மையரிடமிருந்த உள்ளார்ந்த இயலாமைதான் பிரிவினையை தவிர்க்க முடியாததாக்குகிறது என்று அம்பேத்கர் குறிப்பிட்டதை இந்நூல் வலியுறுத்தி சொல்கிறது.

# வகுப்புரிமையா? வகுப்புத் துவேசமா?

**- பெரியார் ஈ.வெ.ரா.**

வகுப்புவாரி உரிமை வேண்டாதவன் தன் வகுப்பை உணரமுடியாதவனோ, தன் வகுப்பைப்பற்றிச் சதேகப் படத்தக்கவனோ ஆவான். ஒரு வகுப்பான், தன் வகுப்புரிமை கேட்பது தேசத் துரோகம் என்று சொல்லப்படுமானால் அப்படிச் சொல்லுகிறவன் ஒரு தேசத்தையும் சேர்ந்திராத நாடோடி, லம்பாடி வகுப்பைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க முடியும். நம்மவர்களுக்கு உண்மையான வகுப்புணர்ச்சி இல்லாததாலேயே, நாம் நாடற்ற நாடோடிகளால் அடக்கி ஆளப்பட்டு வருகிறோம். ‘‘இங்கிலீஷ்காரன் இன்று, அவன் நாட்டின்மீது இத்தனை ஆயிரக்கணக் கான ஆகாயக் கப்பல்கள் பறந்து, பதினாயிரக்கனக்கான வெடிகுண்டுகள் வீழ்ந்து, குழந்தைகளும், குட்டிகளும், மாடங்களும், மாளிகைகளும் நாச மானாலும்கூட, ஓர் உயிர் உள்ளவரை போராடியே தீருவேன் என்று சொல்லுவதன் கருத்து, அவன் வகுப்பு உணர்ச்சியின் - வகுப்புவாதத் தன்மையின் உச்சநிலையேயாகும். நம் நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து பிழைக்க வந்தவர்களுக்கு வகுப்பு உணர்ச்சியோ, நாட்டு உணர்ச்சியோ ஏற்படுவதற்கு நியாய மில்லை. ஆகவேதான், ஏன் சண்டை போடவேண்டும்? விட்டு விட்டுப் போகலாமே என்கின்ற ஞானமும், யார் ஜெயித்தால்தான் என்ன? என்கின்ற ஞானமும் உதயமாகின்றன. அப்படிப்பட்ட ஆள்களுக்கு ஆதிக்கம் வந்ததா லேயே நம் நாட்டிற்கு இப்படி அடிக்கடி படையெடுப்புகளும், ஆபத்துகளும் நேருவது மாத்திர மல்லாமல், இந்நாட்டு மக்களாகிய நாம் - நாடோடிகளால், சூத்திரர்களாகக் கருதப்படுகிறோம்.

மூன்று தலைமுறையோ அல்லது ஒரு நூற்றாண்டோ ஒரே ஊரில் இருந்ததாக ஏதாவது ஓர் ஆரியக் குடும்பத்தை நீங்கள் காட்ட முடியுமா? பிழைப்பு கிடைத்த இடத்தில் வாழ்க்கையும், சவுகரியம் கிடைத்த இடத்தில் ஓய்வும் என்பதில்லாமல் - ஊர் பாத்தியமோ, குலமுறை பாத்தியமோ சொல்லிக் கொள்ள அவர்களுக்கு வசதி உண்டா? அப்படிப்பட்டவர்கள் - நம்மை, நாம் நமது வகுப்புரிமை கேட்பதால் வகுப்புவாதி என்றும் - தேசத் துரோகி என்றும் - உத்தியோக வேட்டைக்காரர்கள் என்றும் சொல்வார்களானால், அது நமது கோழைத்தன்மையும், வாழ்க்கையின் மானமற்ற ஈனத் தன்மையின் பயனுமே ஆகும்.

நாம் உத்தியோக வேட்டைக்காரர்களாம்! ஆம் என்றே வைத்துக் கொள்வோம். நாம் உத்தியோக வேட்டை ஆடுவதில் தப்பு என்னவென்று கேட்கிறேன்? திராவிடநாட்டில் ஒரு பார்ப்பானோ - ஓர் ஆரியனோ உத்தி யோக வேட்டையாடுவதும், ஒரு திராவிடன் உத்தியோக வேட்டையாடு வதும் என்றால், யாருக்கு உத்தியோக வேட்டை ஆட உரிமை இருக்கிறது என்று கேட்கிறேன். உத்தியோக வேட்டையாடாத வகுப்பானுக்கு அவன் நாட்டினிடமும், அவன் வகுப்பினிடமும் பொறுப்பில்லை என்பதோடு, அவனை வகுப்புத்துரோகி என்றுகூடச் சொல்லத் துணிவேன். ஒவ்வொரு வகுப்புக்கும் அவனது வகுப்பு எண்ணிக்கை அளவுக்கு உத்தியோகம் கொடுக்க ஆட்சேபித்தால் - ஆட்சேபிக்கப் பட்ட வகுப்பை இழிவுபடுத்திய தாகவும், கோழைத்தனமுள்ள, மானமற்ற, யோக்கியதையற்ற வகுப்பாகக் கருதியதாகவும் அர்த்தமாகும். எந்த வகுப்பான் தன்னுடைய வகுப்பு எண்ணிக்கை அளவுக்குத் தனது நாட்டில் உத்தியோக வேட்டையாடிப் பெறவில்லையோ, அந்த வகுப்பான் மானமற்ற கோழை வகுப்பானே ஆவான். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன்?

உத்தியோகம் யார் அப்பன்வீட்டுச் சொத்து? உத்தியோகத்துக்குத் தரப்படும் சம்பளம் யார் தாய் - தந்தையார் பாடுபட்ட சொத்து? உத்தியோகம் யாருக்காக, எந்த வகுப்புகாக நிர்வாகம் செய்யப்படுவது என்பதை ஒரு நாட்டானோ, வகுப்பானோ தெரிந்து கொள்வானேயானால் - மற்ற நாட்டானோ, மற்ற வர்க்கத்தானோ, மற்ற வகுப்பானோ நம் நாட்டில் வந்து உத்தியோகம் பார்ப்பதைப் பிராணனை விட்டாவது தடுக்கமாட்டானா என்று கேட்கிறேன்.

**(சென்னையில், 8.9.1940ல் சொற்பொழிவு, குடிஅரசு, 22.9.1940; விடுதலை 29.8.1950)**

*31-ம் பக்கத் தொடர்ச்சி*

இறுதியாக....‘‘பார்ப்பனீயத்துக்கு எதிரான கலகக் குறியீடாக பவுத்தம் திகழ்ந்ததினாலும், மனித குலத்துக்கு "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற உயர்ந்த கோட்பாட்டை வழங்கியதினாலும், அது ஒரு மதமாக இல்லாமல் இருந்ததினாலும் அம்பேத்கர் பவுத்தத்தை தழுவினார். இந்திய ஜனநாயகப் புரட்சியின் திறவுகோலுக்கான வடிவமைப்பை கோடிட்டு காட்டியதினால்தான் அம்பேத்கரின் மேதமை தங்கியுள்ளது என்றும் இந்நூல் நிறுவுகிறது. எல்லா ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையுடன் இணைந்துதான் தமது விடுதலையையும் அடையப்பட முடியும் என்பதை தலித்துகள் கட்டாயம் உணர வேண்டும். ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும் அவர் ஆணோ/பெண்ணோ - எந்த நாடு, மதம்,வர்ண, இனத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் தலித்தின் தோழர் ஆவார்; ‘‘ஒவ்வொரு ஒடுக்குமுறையாளனும் தலித்தின் எதிரி ஆவான்!. என இந்நூல் முடிகிறது. சிறுபான்மையினரையும், தலித் மக்களையும் சம காலத்தில் சுருட்டிக்கொள்ளப் பார்க்கும், ஆக்டோபஸ் கரங்களை கொண்ட ஆர்.எஸ்.எஸ்.,சங்பரிவார் கும்பலின் சதித்திட்டத்தை புரிந்திட இந்நூல் கட்டாயம் பெருந்துணை புரியும். வாசிப்போம்....! யோசிப்போம்....!

**- இரா.திருநாவுக்கரசு**

## ஆசிரியருக்கு மடல்கள்...

அன்புடையீர், வணக்கம். சிந்தனையாளன் திசம்பர் 2020 இதழில் வெளியான ‘ஏழு தமிழர் விடுதலையில் ஆளுநரின் போக்கு அடாதது! தமிழ்நாட்டு அரசே! இன் னொரு தீர்மானம் இயற்றி எழுவரையும் உடனடியாக விடுதலை செய்!’ எனும் தலைப்பில் தோழர் ஆனைமுத்து எழுதிய தலையங்கத்தை நம் தோழர்கள் இலட்சக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பவேண்டும். எழுவர் விடுதலையில் தோழர் ஆனைமுத்து காட்டும் ஆர்வமும் அக்கறையும் மிகுந்த பாராட்டுக்குரியது. ‘இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சீர்குலைக்கும் காவி ஆட்சி’ என்னும் தலைப்பில் தோழர் குட்டுவன் எழுதிய எழுத்தோவியம் அருமையிலும் அருமை. ‘தமிழ்நாடு நம் நாடு! நாயக நாளைக் கொண்டாடும் தமிழ்நாடு நாள் விழாக்களும் போராட்டங்களும்’ என்னும் தலைப்பில் வெளியான செய்திகள் தமிழ்நாட்டு உணர்வையும் ஊட்டுவதாய் விளங்கின. தோழர் ஆனைமுத்து இன்னும் பல்லாண்டு வாழ்ந்து அறிவுப்பணி தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**– தங்க. சங்கரபாண்டியன்**, பொழிச்சலூர்

❖

அன்புடையீர், வணக்கம். சிந்தனையாளன் (திசம்பர் 2020) படித்தேன். ‘ஏழு தமிழர் விடுதலையில் ஆளுநரின் போக்கு அடாதது!’ மனிதநேய மிக்கவர்களின் மனச் சாட்சியின் குரலை எதிரொலிப்பது போலிருந்தது; மிகவும் துணிச்சலாக எழுதப்பட்ட தலையங்கம் அது. தந்தை பெரியாரோடு பயணித்தவர்களுக்கு மட்டுமே உண்டாகக் கூடிய துணிச்சல். மத்திய அரசுக்கு எதிராகப் பேசினாலே ‘தேசவிரோதி’ என்று பட்டம் சூட்டப்படுகிற இழிவான இக் காலகட்டத்தில் எழுவரின் விடுதலையைத் தாமதப்படுத்தும் ஆளுநரின் போக்கைக் கண்டித்துத் தாங்கள் எழுதிய தலையங்கம் பாராட்டுக்குரியது. மருத்துவர் சோமாஸ்கந்தன் அவர்கள் எழுதிய, “ஆதித்திராவிட மக்களின் எழுச்சி நாயகன் இரட்டை மலை சீனிவாசன்” கட்டுரை, தாழ்த்தப் பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தன்னலமற்று சேவையாற்றிய தாத்தா இரட்டைமலை சினிவாசனின் வாழ்க்கையையும் அம்மக்களின் மேம்பாட்டிற்காக அவர் ஆற்றிய பணிகளையும் சுருக்கமாக எடுத்துச் சொன்னது! இன்றைய இளையத் தலைமுறையினர் குறிப்பாக தாழ்த்தப் பட்ட இன இளையத் தலைமுறையினர் போற்றிப் புகழ வேண்டிய தலைவர் தாத்தா இரட்டைமலை சீனிவாசன்!

**– இரா. சாந்தகுமார்**, ஆதனூர்

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி -சனவரி 2021

| | | |
|---|---|---|
| **க.சி.இராமமூர்த்தி** | பல்லாவரம் | 2000/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **ஆ. தேன்மொழி** | மாதவரம், சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **ஆறு. கலைச்செல்வன்** | மஞ்சக்கொல்லை | 500/- |
| **வை. கணபதி** | மேஓலக்கூர் | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி 2021

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Edited and Published by **V. ANAIMUTHU** on behalf of **Marxist Periyarist Communist Party**
No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-600 050.
and Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street),
Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and